1288

"யாழ்ப்பாண தீபகற்பத்தின் கல்வியின் மறுமலர்ச்சியிலும், கல்வி அபிவிருத்தியிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வகிக்கும் பங்கு".

" THE PLACE OF CHAVAKACHCHERI HINDU COLLEGE IN THE EDUCATIONAL RENAISSANCE AND THE DEVELOPMENT OF EDUCATION IN THE JAFFNA PENINSULA".

"திட்டமிடலும் நிர்வாகமும் சம்பந்தமான அபிவிருத்திக் கல்விமானிப் பகுதி மூன்றிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை.

" REPORT ON PLANNING & ADMINISTRATION TO SUBMIT FOR THE B.A (Hons) SECTION THREE".

மாணவர் சுட்டு எண்: D.V.S. 974.

இலங்கைப் பல்கலைக் கழகம்,

கொழும்பு வளாகம்,

கொழும்பு-3.

ஆவணி 1980.

.....

UNIVERSITY OF SRI LANKA,

CLOMBO CAMPUS,

COLOMBO -3.

AUGUST 1980.

# முகவுரை.

தங்கள் கரங்களிலே தவழ்ந்து கொண்டிருக்கும் "யாழ்ப்பாண தீபகற்ப குலவிளக்கு" என்னும் எங்கள் கல்லூரி மலரை மலர வைப்பதில் பெருவகை எய்துகின்றோம். சாவகச்சேரி நகரில் டிறிபேக் கல்லூரி, மகளிர் கல்லூரி, விக்னேஸ்வரா வித்தியாலயம், வீரசிங்கம் வித்தியாலயத்துக்குள் ஓர் வைரமாக விளங்கும் எனது பழைய கல்லூரியாகிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி இன்று உலகெங்கும் புகழ் பெற்று தனது வாரிசுகளை இலங்கையின் நாலா பக்கத்தில் மட்டுமன்றி உலகெங்கும் செல்லவும் வைக்கின்றது.

மனிதனுடைய உடல் வளர்ச்சியுறும் வகையினை நோக்கும் போது சிலருடைய உடல் இளமைக் காலத்தில் வேகமாயும் காலப் போக்கில் வேகம் குன்றி வளர்ச்சி அற்று இருப்பதையும் வேறு சிலருடைய உடல் இளமைக் காலத்தில் வளர்ச்சி குன்றியும் வயதேற ஏற நன்கு வளர்ச்சியடைவதையும் இன்னும் சிலருடைய வளர்ச்சிப்படிப் படியாகவும் பருவத்துக்கேற்றதாக அமைவதையும் காண்கின்றோம். இது போலவே நிறுவனங்களின் வளர்ச்சியும் வேறுபட்டு இருத்தல் இயல்பானதாகும். சாவகச்சேரியிலுள்ள கல்வி நிறுவனங்களுள் முதன்மை வாய்ந்ததும் மத்திய மகாவித்தியாலயமாகத் தற்போது தர முயர்ந்தும் உள்ளதுமான சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வளர்ச்சியை நோக்கும் போது படிப்படியாக மட்டுமன்றி கால, தேச, சமூகச் சூழ்நிலைகளுக்கு ஏற்றதாகவும் வளர்ந்து வருவது கவனிக்கத்தக்கது. இந்நிறுவனத்தின் எழுபத்தைந்து ஆண்டு நிறைவுறும் இவ்வேளையிலும் இதன் சீரிளமைத்திறன் குன்றிருப்பதையும் இதன் செயற்பாடுகள் வியந்து போற்றத்தக்கனவாக இருப்பதையும் கண்டு கழிபேருவகை கொள்வதோடு அதனை எழுத்து வடிவில் வடிப்பதில் பெருமிதம் கொள்கின்றோம்.

இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கடந்த கால நிலையைத் தெளிவாக்க உதவி செய்தவர்களுள் முதலில் என் வணக்கத்தை தெரிவிக்க உரித்தானவர் செல்வி. சரோஜினி ராமசாமி ஆவர். எனது பிரதேசத்தில் எனது கல்லூரியை நான் ஒரு கட்டுரையாக எழுத ஆசைப்படுகின்றேன் எனக் கூறியவுடன் இதனை கட்டுரையாக எழுத சம்மதிப்பார்களோ என ஐயுற்று எத்தனையோ இடையீடுகளுக்கிடையில் நான் விரும்பிய தலையங்கத்தையே எழுத உதவியவரும் அதற்கான படிமுறைகளை வகுத்துத் தந்தவரும் இவரேயாவர்.

அடுத்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தற்போதைய அதிபரான திரு. பூ. வெற்றிவேலு வணக்கத்துக்குரியவராவர். பாடசாலை நாட்களில் கூட நான் கேட்கும் விடயங்கள் யாவற்றையும் தந்து பல புத்தக உதவிகள் செய்து, மேலும் கேட்காத விடயங்கள் தேவையான யாவற்றையும் மனம் கோணாமல் தனது கஷ்டத்தை நோக்காமல் தந்துதவிய எனது அதிபர் எனக் கூறுவதில் நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன். அவர் சேவை என்றென்றும் சாவகச்சேரியில் தொடர்ந்து ஆற்றுவதாக!

அடுத்து ஆசிரியர்கள் நிலையில் நோக்க தமது சிரமத்தையும் பொருட்படுத்தாது தனது பாடசாலை நேரம் தவிர்ந்த நேரத்தில் தனது களைப்பையும் கவனியாது தனது இல்லத்திலேயே எனக்குத் தேவையான உதவிகளைச் செய்த திருமதி. சிவநாராயணமூர்த்திக்கும் எனது வணக்கத்தைச் செலுத்துகின்றேன். மற்றும் தனது நூல்களைத் தந்துதவிய திரு. பஞ்சாட்சரம் ஆசிரியர் அவர்கட்கும், சமயத்துறையின் தலைவராக விளங்குகின்ற சைவ சமய கல்வி பரீட்சைகளில் தேவையானவற்றை தந்துதவிய திரு. சிதம்பரநாதன் அவர்கட்கும் எனது வணக்கத்தை தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு எனது ஆசையை நிறைவேற்றவும், எமது பிரதேசக் கல்லூரியை நாடெங்கும் தெளிவாக்கவும் உதவிய யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இவற்றையெல்லாம் ஒரு நூலாக உருவாக்கம் செய்ய உதவிய அச்சுப் பொறியாளர் செல்வி. எஸ். மகாலிங்கம் அவர்கட்கும் எனது நன்றியைக் கூறி முடிக்கின்றேன்.

. . . . . . .

ஓம்.

. . . . . . .

செல்வி. ஐயாத்துரை
வடிவாம்பாள்
01 - 08 - 1980

## பொருளடக்கம்.

"யாழ்ப்பாண நிலப்பரப்பில் கல்வியின் மறு மலர்ச்சியிலும் கல்வி அபிவிருத்தியிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வகிக்கும் பங்கு"

. . . . . . . .


(1) அந்நாள் சூழ்நிலை.

- (அ) கல்லூரியின் வளர்ச்சி. 2-8
- (ஆ) புதிய சூழ்நிலை. 8-13
- (இ) கல்லூரியின் தாரக மந்திரம். 13-16
- (ஈ) கீதமும் அதன் முக்கியத்துவமும். 16-19

(2) கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சி.

- (அ) கலையியல் பகுதி, விஞ்ஞானப் பகுதி. 19-24
- (ஆ) கல்லூரியின் சங்கங்கள். 24-26
- (இ) சைவப் பணிகளும் சமயக் குழுவும். 26-32
- (ஈ) நூலகம் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டும் விதம். 32-37

(3) விளையாட்டுத்துறை.

- (அ) உடற் கல்வியும் விளையாட்டுத் தொகுதிகளின் வளர்ச்சியும். 38-44
- (ஆ) சாரணர் இயக்கம். 44-46
- (இ) குருளையர். 46-47
- (ஈ) பெண் சாரணர். 47-48

(4) ஆசிரிய சகோதரத்துவம்.

- (அ) அபிவிருத்திச் சங்கம். 48-51
- (ஆ) கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம். 52-56
- (இ) தென்மராட்சியின் கலங்கரை ஒளி. 56-60


. . . . . . . . . . .

## அத்தியாயம் - 1.

"யாழ்ப்பாண தீபகற்பத்தில் கல்வியின் மறுமலர்ச்சியிலும் கல்வி அபிவிருத்தியிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வகிக்கும் பங்கு".

இலங்காபுரியின் வடக்குப் பகுதியில் தமிழ் பேசும் மக்களையும், சைவ சமயத்தையும் முழுதாகக் கொண்டு இயங்கும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் சாவகச்சேரி என்னும் பெயர் பூண்ட பரந்த நகரம் இன்று எல்லோர் முன்னிலையிலும் ஒரு முத்துமணியாக, ஆச்சரியமான ஒரு இடமாக திகழ்கின்றது. யாழ்ப்பாண மாநகரத்தையே மிஞ்சி விடக் கூடியதாக இன்று சாவகச்சேரிநகரம் திகழ்ந்து வருகின்றது. இவ்வாறு சாவகச்சேரி நகரம் செறிந்து விளங்க ஏற்பட்ட பல அம்சங்களில் "கல்வி" என்னும் முக்கிய பொருளை அளிப்பதால் தலைசிறந்து விளங்கும் "சாவகச்சேரி இந்துக் கல்லூரியும்" ஒரு காரணமாகும்.

அந்நாள் சூழ்நிலை :-

இந்நாடு அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் அவர்களுடைய சமயத்தைப் பரப்புவதற்கு கல்வி ஒரு கருவியாகப் பயன்பட்டு வந்தது. இதன் காரணமாக சைவ சமயத்தைச் சேர்ந்த பிள்ளைகள் தமக்குரிய சமயச் சூழ்நிலையில் கல்வி கற்று உளவிருத்தி பெறமுடியாதிருந்தது. இந்த அவலநிலையைப் பலகாலும் கண்டு மனங்கவன்ற சைவப் பெருமக்களின் முயற்சியால் யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலும் சைவ சமயச் சூழ்நிலையில் கல்வியூட்டும் பள்ளிகள் படிப்படியாகத் தோன்றின.

இந்த எழுச்சியின் விளைவாக 1904 ஆம் ஆண்டு சாவகச்சேரிச் சந்தைக் கண்மையில் ஒரு சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை தொடங்கப்பட்டது. அங்கு இடவசதி போதாமையால் அடுத்த ஆண்டிலேயே அதனைச் சங்கத்தானைக்கு இடம் மாற்ற வேண்டியதாயிற்று. இப்பள்ளியின் முதற் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றும் பேறு - திரு. எஸ். கே. கந்தசாமி அவர்களுக்குக் கிட்டியது. 1907இல்...

இப்பள்ளி இரு பிரிவாக, ஒன்று இரு மொழிப் பள்ளியாகவும், மற்றையது தமிழ் பள்ளியாகவும் இயங்கி வரலாயிற்று. அடுத்த ஆண்டில் அரசினர் நன்கொடையின்மையால் பல இன்னல்களையும் பெருந் தடைகளையும் இரு மொழிப் பள்ளி எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இதனால் அது எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சியடையவில்லை.

கல்லூரியின் வளர்ச்சி :-

"திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை" என்பர். வளர்ச்சியுற முடியாது நிலை குலைந்து இடர்ப்பட்ட இச் சைவப் பள்ளிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க இறைவன் விரும்பினன் போலும். சைவப் பெருமகன் பொது நலத் தொண்டன் திரு. வி. தாமோதரம்பிள்ளை அவர்களின் வடிவில் அவன் தன் செயற்றிறனை வெளிப்படுத்தலானன். திரு. தாமோதரம் பிள்ளை அவர்களின் அயரா உழைப்பினால் 1921ம் ஆண்டில் ஒரு கட்டிடமும் இரு வகுப்பறைக் கொட்டில்களுமடங்கிய ஓர் ஆங்கிலப் பள்ளியாக அது மாறியது. நல்லெண்ணத்தோடு தாமோதரனார் ஊன்றியவித்து இன்று நம்மவரனைவர்க்கும் நன்நிழல் அளிக்கும் பெருமரமான விந்தை பலகாலும் எண்ணிவியப்பதற்குரியது. அக்காலத்து நிலவிய சூழ்நிலை - காரணமாக இன்னல்களின் மேல் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்த இப்பள்ளிக்கு அரசின் உதவி நன்கொடையும் கிடைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனைக் கண்டு உளம் கொதித்த தாமோதரனார் தனது உடைமைகளை விற்றுப் பணமாக்கி அங்கு பயிற்றிய ஆசிரியர்களுக்கு ஊதியமளித்து வந்தார். தொடர்ந்தும் இவ்வாறு செய்வதற்கு வசதியின்மையால் அதனை யாழ் இந்துக் கல்லூரிச் சபையிடம் ஒப்படைத்து அரசினர் நன்கொடை பெறும் ஆங்கிலப் பள்ளியாக இயங்குமாறு அவர் வழிவகுத்தார். கோயில் வீதியில் இருந்த தமிழ்ப் பள்ளியையும் இங்கு இடம் மாற்றி அதனைத் தனது முகாமையில் இயங்குமாறு செய்தார். ஆங்கிலப் பள்ளியின் தொடக்க காலத்தில் திரு. கார்த்திகேசு...

அவர்களும் , பின்னர் திரு. சுவாமிநாதன் அவர்களும் அவர்களுக்குப்பின் திரு. கெளிகமன் அவர்களும் தலைமை ஆசிரியர்களாக அருந்தொண்டாற்றினார்கள்.

அந்நாளில் சுற்றுடலில் நிலை பெற்றிருந்த கல்லூரியோடு - போட்டியிட்டு மாணாக்கர்களை இப்பள்ளிக்கு ஈர்ப்பது அத்துணை எளிதாக இருக்கவில்லை. கல்வித் தரத்தை உயர்த்தி மக்கள் அதனை அறியுமாறு செய்தாலன்றி இது கைகூடாது என்பதை உணர்ந்த அந்நாள் அதிபர் திரு. சுவாமிநாதன் அவர்கள், திரு. ச. கை. செல்லையா அவர்களின் துணையோடு நிலையான உயர் கல்விப் பெறு பேறுகளை நிலைநாட்ட அயராதுழைத்தார். எனினும் இவரது முயற்சியால் பள்ளி பெரும் பயனடைய முடியாதபடி இருவரும் இடமாற்றம் பெற்றனர். மீண்டும் பழைய நிலையே உருவாயது.

கலங்காத உறுதியோடு சைவப் பெருமக்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக திரு. ந. அருணாசலம் அவர்கள் ஆங்கிலப் பள்ளியின் தலைமையை ஏற்றார். ஆங்கில சி. பா. த. பத்திர வகுப்பைத் தோற்றுவித்து பள்ளியை பல துறைகளிலும் தீவிரமாக வளர்ச்சியடையச் செய்த பெருமை இவருக்குரியது. பள்ளியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஒர் ஆலோசனைச் சபையை முதலில் வகுத்தளித்த பெருமையும் இவருக்குரியது. இவரது பலதுறை முயற்சிகளின் விளைவாக மாணாக்கர் தொகை ஆண்டு - தோறும் அதிகரிக்கலாயிற்று. இவர்களது தேவைக்காக புதிய கட்டடங்களையும் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. திரு. அருணாசலம் அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சியின் விளைவாக இன்று அவர் பெயரால் விளங்கும் பிரதான மண்டபம் அமைக்கப்பட்டது. ஒரு சமுதாயத்தின் மாதிரி அமைப்பே கல்விக்கூடம் என்பது அறிஞர் கருத்து. இதனை வலியுறுத்தும் வகையில் பள்ளியின் சேவை, மாணாக்கர்களுடன் மட்டும் அமையாது சமுதாய உறுப்பினர்களாகிய பொதுமக்களையும் தழுவியதாக இருத்தல் வேண்டும் எனக் கருதிய அவர் பூரணை நாட்களில் சைவசமயச் சொற்பொழிவுகள்...

நிகழ ஒழுங்கு செய்து மக்கள் சமய அறிவுக்கு விருந்திட்டு வந்தார். இத்துணை திறமையுடையவராக இருந்தும் நீண்டகாலம் பணிபுரிய முடியாது பள்ளியை விட்டு விலகுமாறாயிற்று.

எனினும் இப் பகுதியில் வாழும் சமூக மக்களிடையே சமய கல்வித்துறையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அந்நிய மதத்திலும், அந்நிய நாகரீகத்திலும் மோகம் கொண்ட மக்களை திசை திருப்ப எத்தனித்தார். சமயத்துறையில் மக்களை பதப்படுத்த அக்காலம் சட்டசபை உறுப்பினராயிருந்த சேர். பொன். இராமநாதனை அழைத்து அவரின் சொற்பொழிவு மூலம் இப்பகுதி மக்களை சைவ சமயத்திலும், தமிழ் மொழியிலும் பற்று வைக்க வைத்தார். சாவகச்சேரிப் பட்டினத்தில் டிறிபேக் கல்லூரியை ஸ்தாபித்து நடாத்திய மிஷனரிமார் இறால் சங்கத்தானையில் நிறுவப்பட்ட ஆங்கிலக் கல்லூரிக்கு அரசு உதவி கொடுப்பதற்கு முட்டுக்கட்டையாக இருந்தனர். இச் சந்தர்ப்பத்தில் சேர். பொன். இராமநாதன் முன் வந்து உதவி இவரின் ஆங்கில வித்தியாசாலைக்கு அரச உதவி பெற்றுக்கொடுத்தார். அரச உதவி பெறும்வரையும் தனது வித்தியாசாலையைக் கைவிடாமல் தன் பெயரில் உள்ள காணி பூமிகளை விற்று ஆசிரியருக்கு வேதனம் கொடுத்து கல்லூரியை தழைக்க வைத்த பெருமை இவரையே சாரும்.

ஒரு சமூக நிறுவனம் சமூகத்திற்கே உரியது. தனி ஒருவனால் அதை தொடர்ந்து நடத்த முடியாதெனக் கண்ட பெரியார் கல்லூரியின் ஒளிமயமான காலத்தை மனதில் கொண்டு தன்னால் நிறுவப்பட்ட கல்லூரியை, கல்லூரிகளை நடாத்தி சமூக சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒரு சிறந்த உயர்ந்த கல்வி நிறுவனமான சாவகச்சேரி இந்துக் கல்லூரி பரிபாலன சபையிடம் சென்று சேர வாய்ப்பேற்பட்டது. இவரின் மன ஆர்வத்தையும் பொழிப் பற்றையும், மதப் பற்றையும் சேவை செய்யும் மனப்பான்மையையும் உணர்ந்த இந்துக்கல்லூரி பரிபாலன சபை இவரை தன் சபையின் ஆயுட்கால உறுப்பினராக நிய...

மிந்தது. ஆகவே 1946 ஆம் ஆண்டு அவர் இயற்கை எய்தும் வரைக்கும் இக் கல்லூரிக்கு அடிக்கடி சென்று கல்லூரியைக் கண்மணிபோல் கவனித்து வந்தார். நல்ல எண்ணத்துடன் இப்பெரியார் இக் கல்லூரியைச் சங்கத்தானையில் நிறுவியமையால் தான் இன்று அதன் பிரகாரம் சங்கத்தானையில் மட்டுமல்ல, சாவகச்சேரியில் மட்டுமல்ல, அகில இலங்கையிலும் தெறித்துக் கொண்டிருக்கின்றது.

கல்லூரியின் ஆரம்பகால வளர்ச்சி யாழ் இந்துக் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பில் வந்ததன் பின் கல்லூரி அதிஷ்டவசமாக கடமை உணர்ச்சியும் திறமையுமுள்ள அதிபர்களைப் பெற்று நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. அண்மையிலுள்ள டிறிபேக் கல்லூரி ஐரோப்பிய மிசனெறிமார் பொறுப்பில் இயங்கி வருவதால் பெற்றோர் பலர் இப்பாடசாலைக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வந்தனர். ஆகவே இவ் அதிபர்கள் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அல்லும் பகலும் பாடுபட்டு கல்லூரியின் கல்வித் தரத்தை உயர்த்தினர். அதே நேரத்தில் மாணவர்களிடையே சைவ சமய உணர்ச்சியையும், மொழிப் பற்றையும் வளர்த்தனர். எனவே கல்லூரியின் கல்வித்தரம் படிப்படியாக உயர மாணவர் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது. பாடசாலைக்கு கட்டிடங்கள் நிறுவும் துறையில் இச்சுற்றுடலில் வாழும் மக்கள் அதிக உதவி புரிந்தனர். "கல்லூரி நமதே இதை வளர்ப்பது எமது கடமை" என்பதை அவர்கள் உறுதியாக நம்பி ஓர் மண்டபத்தைக் கட்டி எழுப்புவதற்கு பண உதவியும் பொருளுதவியும் சரீர உதவியும் நல்க முன் வந்தனர். அப்போது அதிபராயிருந்த திரு. அருணாசலம் மக்களுடன் ஒத்துழைத்து தென்மராட்சியின் பல பாகங்களுக்கு தானும் ஆசிரியர்களும் - நேரே சென்று சமூகத்திடமிருந்து சகல உதவிகளும் பெற்று தற்போது கல்லூரியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் பெரிய மண்டபத்தைக் கட்டி எழுப்பினர். ஆரம்ப காலத்தில் இருந்தே இக்கல்லூரியின் தலைமைப் பதவியை ஏற்ற ஒவ்வொரு அதிபரும் கடமையுணர்ச்சி, பொறுப்புணர்ச்சி....

திறமையும் சமூக சேவை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையும் உள்ளவராக திகழ்ந்தமையால் தான் இக் கல்லூரி வெகுவிரைவாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இவ் அதிபர்கள் சைவத்தையும், தமிழையும், ஆங்கிலத்தையும், பொது அறிவையும் மாணவர்களிடையே ஒருங்கே வளர்த்தமையால் தான் இன்று இப்பதவியில் வாழும் சமுதாயம் சைவப் பழம் எனக் கூறத்தகும், அழவுக்கு சைவ சமயத்தைப் பேணிப் போற்றி அனுட்டித்து பரந்த தமிழறிவு உள்ளதாகவும் விளங்குகிறது.

மாணவர் தொகை படிப்படியாக குறைந்தமை சைவ அபிமானிகள் நெஞ்சில் பலத்த அடியை ஏற்படுத்தியது. அன்று அருணாசலம் அவர்கள் வந்திருக்காவிட்டால் இன்று நந்தா விளக்காய் தென்மராட்சி மக்களுக்கும் அதன் அயற்கிராம மக்களுக்கும் பேரொளி நல்கி மிளிர்கின்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரியென்பது அரிதாகி இருக்கும். உயர் கல்வியைப் பெற்று உள்ளார்ந்த சைவப் பண்போடு தென்மராட்சி மக்கள் வாழ்வாங்கு வாழ வழி வகுத்த கல்வித் தாபனம் இதுவே. இதன் வரலாற்றை அறிந்து இறும்பூதெய்தாத் தமிழ் மகனே தென்மராட்சியில் இருக்க மாட்டான். இத்தகைய உன்னத நிலையை இந்தக் கல்லூரி இன்று எய்தி இருப்பதால் தென்மராட்சி வாழ் மக்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியடைகின்றார்கள். அன்று அப் பெருந்தகை அடிகோலிய சிறிய ஆங்கிலப் பாடசாலை பல்கிப் பெருகி பெரு விருட்சமாகி மாபெரும் கல்லூரியாக வளர்ந்து பல மாணவர்க்கும் கல்வியில் வழி வகுத்து நிறைப்படுத்தி சான்றோராக்கும் பணியை வளர்த்துக் கொண்டே இருக்கின்றது.

இப்பாடசாலையின் ஆரம்ப கட்டத்தில் இரு பெரும் பிரச்சினைகள் தலைமையாசிரியர்களையும், தென்மராட்சி சைவ அபிமானிகளையும் வாட்டி வதைத்தன. அவற்றுள் ஒன்று இப்பாடசாலைக்கு வேண்டிய மாணவர்களைத் திரட்டுவதில் இப்பாடசாலைக்கும் அயலிலுள்ள டிறிபேக் கல்லூரிக்கும் ஏற்பட்ட மிகப் பெரிய போட்டியாகும். இப் பெரும் போட்டி....

காரணமாக கிராமப்புறங்களிலுள்ள பலவறிய மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைக் கற்கும் பேறுகிட்டியது எனலாம். இரண்டாவது பிரச்சினை இப்பாடசாலையின் இறுதிப் பரீட்சையாகிய அரசினர் ஈ.எஸ்.எல்.சி. யில் தகுந்த பேறுகிட்டுவதாகும். இப்பாடசாலையில் இவ் வகுப்பில் கல்விகற்ற மாணவர்களில் பலர் முதிர்ந்த வயதுடையோரும் பரீட்சையில் பலமுறை முயன்றும் பரீட்சையில் தோல்வி கண்டவராவர்கள். இவர்களைக் கொண்டு பரீட்சையில் தகுந்த பேறு காட்டுவது இலகுவான காரியமாக அமையவில்லை. எனினும் தலைமையாசிரியர்கள் விடாமுயற்சியினாலும் அவர்களது பக்கபலமாகிய ஆசிரியர்களாலும் ஈ.எஸ்.எல்.சி. அரசினர் பரீட்சையில் நிரந்தரமான பேறு கிடைத்தது.

1942ம் ஆண்டு ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆழ்ந்த அறிவுள்ள கல்விமானான திரு. த. முத்துக்குமாரு கல்லூரியின் தலைமைப் பதவியை ஏற்றார். கல்லூரியின் தரத்தைத் மேன்மேலும் உயர்த்த வேண்டி இவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி நிர்வாக சபையுடன் வாதாடி தரம், திறமையுள்ள ஆசிரியரை கல்லூரியில் சேவையாற்றப் பெற்றார். அவரின் நிர்வாக காலத்தில் கல்லூரி பல துறைகளிலும் முன்னேறி ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்ததெனக் கூறலாம். சுருங்கக் கூறின் இவர் காலத்தில் கல்லூரியின் ஒளிமயமான எதிர்காலம் உதயமாகிவிட்டதென்றே கூறவேண்டும். இவரின் திறமையையும் ஆற்றலையும் அறிந்த ஆசிரியர்கள் இயல்பாகவே இவருக்கு கீழ்படிந்து இவருடன் ஒத்துழைத்து தங்கள் - பொறுப்பிலிருக்கும் மாணவ சமுதாயத்தை கட்டி எழுப்புவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

இவ்வாறு அதிபர், ஆசிரியர், மாணவர் சமுதாயத்தில் சிறந்து என்றும் அழியாப் புகழ் பெற்றவராக விளங்கினார். இவர் சிறந்த அறிஞராகவும், எதிர்காலம் பற்றிய உயர்ந்த கனவுகள் காண்பவராகவும் சாதனைகளை நிலைநாட்டுவதில் தீரராகவும், தக்க ஆசிரியர்களைத் ....

தேடிப் பிடித்து கல்லூரியின் கல்வித் தரத்தை உயர்த்துவதில் வல்லவரா கவும் விளங்கினர்.

இவருக்குப் பின் பதவியேற்ற திரு. எஸ். கனகரட்டினத்துக்கு முன் துணை அதிபராகவும் இருந்த திரு. வே. குமாரசாமி இக் கல்லூரியின் தலை சிறந்த பழைய மாணக்கர்களுள் ஒருவர். நாடாளுமன்ற உறுப்பினராகிப் பின் துணைஅமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. 1946 இல் "சி" தரத்திலிருந்து "பி" தரத்திற்கும், 1949 இல் "பி" தரத்திலிருந்து "ஏ" தரத்திற்கும் இதனை உயர்த்தியதோடமையாது அரசினர் நேர்வுக்கு மாணக்கர்கள் விஞ்ஞான பாடங்கள் எடுக்கக் கூடிய வசதிகளையும் வகுத்தளித்த பெருமை இவருக்குரியது. பெருகிவரும் மாணக்கர் தொகைக்கு ஏற்ப - கட்டிட வசதி அமையவில்லை. இக்குறையை மேற்கொள்ளுவதற்காக இப் போது முதனிலைப் பிரிவு இருக்கும் ஒரு துண்டு நிலம் விலைக்கு வாங்கப் பட்டு நண்டவாளத் தூண்களுடன் ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டது. ஆசிரியர் திரு. த. முருகப்பா அவர்கள் ஒரு துண்டு நிலம் நன்கொடையாக வழங்கினர். இந்நிலத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உதவியுடன் ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டது. அதிபர் முத்துக்குமாரு காலத்தில் ஓர் உயர் நிலைக் கல்லூரிக்கு வேண்டிய மரபுகள் குறிக்கோள் என்பன உரு வாக்கப்பட்டன. இவருடைய தொண்டு என்றென்றும் நிலைபெற்றிருக்கும் அத்துணைச் சிறப்புடையது.

புதிய சூழ்நிலை :-

கற்பித்தலில் வல்லவராகத் திகழ்ந்த திரு. ஆ. மண்டலேஸ்வரன் அவர்கள் 1953 இன் நடுப் பகுதியில் அதிபராகப் பதவியேற்று சிறப் பாகச் செயலாற்றினர். சிறந்த ஆசிரியர்களைத் தேடிக் கல்வித் தரத்தை உயர்த்தியதன் விளைவாக க. பொ. த. (சா/தி . உ/தி) இரு பிரிவுகளிலும் நல்ல பெறுபேறுகள் கிடைத்தன. உயர்நிலை விஞ்ஞானப் பிரிவிலிருந்தும் சில மாணக்கர் பல்கலைக் கழகம் புகும் வாய்ப்புக்கிட்டியது..

இதன் விளைவாக தனியாக இயங்கி வந்த தமிழ்ப் பள்ளி 1957இல் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. இவ்வாறு ஒன்றிய இரு பள்ளிகளையும் அரசு பதவியேற்றது. கல்வித்தரம் தொடர்ந்து சிறந்த போதிலும், தாய் - மொழி மூலம் பயிற்றல், அரசுடமையாகிய பள்ளி ஆகியவற்றால் ஏற்பட்ட புதிய சூழ்நிலைகளைச் சமாளிக்க முடியாததால் கல்லூரியின் பெயர் சற்றேமங்கலாயிற்று. கல்வி விற்பன்னராகிய இவர் சுமார் பத்து வருடங்கள் சேவை ஆற்றியவர். கற்பித்தலில் மிகுந்த திறமை படைத்தவர் இவர். மாணவர் உள்ளத்தில் கற்பிக்கும் விடயங்களை பசுமரத்தாணி போல் பதிய வைப்பதால் விற்பன்னர். இதனால் மாணவர்கள் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்றவர்.

இவருடைய காலத்தில் தான் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வரலாற்றில் எஸ். எஸ். சி. பரீட்சைகளிலும், ஜீ. சி. ஈ (ஏ/எல்) பரீட்சைகளிலும் மாணவர்கள் பெறுபேறுகளைப் பெற்று கல்லூரிக்குச் சிறந்த பெயரைப் பெற்றுத் தந்தனர். அத்துடன் ஏச். எஸ். சி. விஞ்ஞானப் பகுதியிலும் இரு மாணவர்கள் பெருமையுடன் சர்வகலாசாலைக்குச் செல்லும் பாக்கியத்தைப் பெற்றனர். இவருடைய காலத்திற் தான் நாட்டின் கல்விக் கொள்கையிலும் கல்விப் போக்கிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டது.

இதையடுத்து 1960 ஆம் ஆண்டு கல்வித் தாபனங்கள் தேசியமயமாக்கப்பட்டது. இத் தேசிய மயக் கொள்கையினால் கல்வித் தரத்தின் தன்மை பாதிக்கப்பட்டது. தாய்மொழி மூலம் கல்வி, கல்லூரிகளில் நடைமுறைக்கு வந்தமையினால் கல்வியின் வளர்ச்சியில் ஒரு தளர்வு ஏற்பட்டது. ஆங்கில மூலம் கல்வி கற்றபோது, ஆங்கில அடிப்படை அறிவில் கலைப்பகுதி மாணவர்கள் விஞ்ஞானப் பகுதி மாணவர்களிலும் பார்க்க சிறந்து விளங்கினர். இதன் காரணமாகக் கலைப்பகுதியினர்க்கே சாதாரண உத்தியோக வாய்ப்பு அதிகமாக இருந்தது. தாய்மொழி மூலம் கல்வியின் பின் கல்லூரி மாணவர்கள் விஞ்ஞானக் கல்வி மோகத்தில் வாழ்ந்தனர்.

இதுநாள் வரையும் ஒரு கல்லூரியின் திறமை முக்கியமாக ஜீ. சீ. ஈ (ஓ/எல்) பரீட்சைப் பேற்றிலிருந்தே கணிக்கப்பட்டது. இவருடைய - காலத்திலிருந்தே கணிக்கப்பட்டது. இவருடைய காலத்திலிருந்து முக்கியத்துவம் படிப்படியாக உடைந்து (ஜீ. சீ. ஈ) பரீட்சைக்கு மாறியது. இம் மாற்றங்களின் தாக்கல்களை மேற் கொள்ளக் கல்லூரியின் எல்லாச் சக்திகளும் ஒன்று திரண்டு உழைக்க வேண்டும். இவருடைய காலத்தில் கல்லூரி வளர்ச்சிக்குதவும் சக்திகள் ஒவ்வொன்றாகப் பிரிந்தன. கல்லூரியின் புகழும் மங்குவதாயிற்று.

இவரைத் தொடர்ந்து 1963 இல் திரு. ஏ. கே. கந்தையா அவர்கள் கல்லூரி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார். நிர்வாகத் திறமையும் செயல்திறனும் வாய்ந்த இவரது விடாமுயற்சியும், அயராத உழைப்பும் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. இதுவே சாவகச்சேரி இந்துக் கல்லூரி யாழ்ப்பாண தீபகற்பத்திலுள்ள ஏனைய முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ வைத்தது. "பசி போக்கார் கண் துஞ்சார்... கருமமே கண்ணாயினார்" என்ற முதுமொழிக் கிணங்க திரு. ஏ. கே. அவர்களின் தலைசிறந்த நிர்வாகமும் ஏனைய ஆசிரியர்களுடைய தன்மை மற்ற சேவையும் உயர்வடையச் செய்தது.

உயர்நிலைக் கல்வித் துறையில் சிறந்த பெறுபேறுகளைத் தொடர்ந்து பெறக் கூடிய ஒரு மரபைத் தோற்றுவித்த பெருமை இவரையே சாரும். விஞ்ஞானத் துறையிலும் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டதாயினும் விரும்பிய பலன் கிட்டவில்லை. கல்வி நிலை சிறக்க அதனைத் - தொடர்ந்து மாணக்கர் தொகையும் பெருகலாயிற்று. இந்நிலையில் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் அரசினரிடமிருந்து ரூபா 33,000 பெற்று உதவினார்கள்.

பழைய மாணக்கர்களின் உதவியோடு விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கும் பணி மேற் கொள்ளப்பட்டது. கல்லூரியின் இந்நாள் சிறப்புக்கு இவராற்றிய தொண்டு மிகப் பெரிது. கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய சக்திகளனைத்தையும் ஒன்று திரட்டுவதில் வல்லவராவர்.

இவரைத் தொடர்ந்து திரு. மு. வைத்திலிங்கம் அவர்கள் பாடசாலையின் தலைமைப் பீடத்தை அலங்கரிக்க 1965 இல் முன்வந்தார். கல்லூரியின் உள்ளும், புறமும், அண்மையிலும், சேய்மையிலும் பல விடயங்களில் கல்லூரி வளர்ச்சிக்கு அனுகூலமாயிருந்த பல உதவிச் சக்திகளையும் ஒன்று - சேர்த்து ஊக்கமளித்துக் கல்லூரியை வளர்ப்பதில் ஒப்புயர்வற்றவர். எதிரிகளையும் வசீகரிக்கும் காந்தசக்தி வாய்ந்தவர். எவர்க்கும் உதவி செய்ய வேண்டும் என்னும் பண்புடையவர். இதனால் இவருடைய காலத்தில் கல்லூரி பல துறைகளிலும் தீவிரமாய் முன்னேறியது. கல்வித் தரம் அதிகம் உயர்ச்சி பெற்றது. இவருடைய ஆட்சிக் காலத்தில் போட்டிப் பரீட்சைகளிலும் - ஜீ. சீ. ஈ (ஓ/எல்) பரீட்சைகளிலும், ஜீ. சீ. ஈ (ஏ/எல்) பரீட்சைகளிலும் மாணவர் மிக உச்சமான பெறு பேறு பெற்றனர்.

பழைய மாணுக்கர்களால் தொடங்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூட வேலைகளுள் பெரும்பகுதி இவர் காலத்தில் நிறைவுற்றன. கொடைவள்ளல் திரு. மு. நா. சுப்பிரமணியம் அவர்கள் ரூபா 12,000 செலவில் ஒரு திறந்த வெளியரங்கை அமைத்து கல்லூரியின் நெடுநாட் தேவைகளுள் ஒன்றை நிறைவுறச் செய்தார். திரு. வைத்திலிங்கம் அவர்களின் பெரு முயற்சியால் க. பொ. த. (சா/தி. உ/தி) கலைப் பிரிவு ஆகியவற்றில் தேர்வுப் பெறுபேறுகள் சிறந்தனவாயினும் விஞ்ஞானத்துறையில் அவர் முயற்சி விரும்பிய பயன் அளிக்கவில்லை. எனினும் அவரது பணியையாரும் குறைவாக மதிப்பிட முடியாது.

திரு. மு. வைத்திலிங்கம் அவர்கள் ஓய்வு பெற்றதும் அவர் காலத்து துணை அதிபராக இருந்த திரு. பூ. வெற்றிவேலு அவர்கள் செயலாற்றும் முதல்வராக 1970ம் ஆண்டின் நடுப் பகுதியில் நியமனம் பெற்றார். ஆசிரியர், துணை அதிபர் ஆகிய பல்வேறு நிலைகளில் இப் பள்ளியின் வளர்ச்சியை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் கண்டு பெற்றபட்டறிவு, செயற்திறனும், ஆற்றலும் மிக்க ஓர் அதிபராக அவரைத் திகழ வைத்தது. பழைய மாணுக்கர் சங்கத்தின் செயலாளராக இவர் இருந்த காலத்தில் தொடங்கப்....

பட்ட விஞ்ஞான ஆய்வு கூடம் இவர் ஆட்சிக் காலத்தில் 1971 இல் அந்நாள் நீதி அமைச்சர் கலாநிதி என்.எம். பெரேரா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. விஞ்ஞான ஆய்வுகூட வசதி ஏற்பட்டதும் அதைத் தொடர்ந்து உயர்நிலை விஞ்ஞானப் பிரிவுத் தேர்வுப் பெறுபேறுகளும் சிறக்கலாயின. நந்நிழல் கண்ட மாணுக்கர் அணியணியாகக் கல்லூரியில் திரண்டனர்.

மீண்டும் நெருக்கடி ஏற்படலாயிற்று. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் மீண்டும் கைகொடுத்துதவினர். அவர் முயற்சியால் ஐந்து வகுப்பறைகள் அடங்கிய ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டது. திறந்த வெளியரங்கு வேலைகளும் நிறைவுற்று 1972 இல் பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது. கற்கும் போதே வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய ஒரு தொழிலைப் பயின்று கொள்ளுதல் பயன் விளைக்கும். இதனைக் கருத்திற்கொண்டு பெற்றோர் ஆசிரியர் சங்கம் இடவசதிக்க இரண்டு அறைகளோடு கூடிய ஒரு - தொழிற்கூடத்தை அமைத்துதவியது. இக் கல்லூரி மாணவர்களின் கைத்திறன்களை வளர்ப்பதற்கு இத் தொழிற்கூடம் பெரிதும் உதவி வருகின்றது. இச் சங்கத்தின் பெரு முயற்சியால் நூல் நிலையமும் அலுவலகமும் அடங்கிய ஓர் இருமாடிக் கட்டிடம் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது.

தேசிய உயர்கல்விச் சான்றிதழ் வகுப்புகள் தோன்றியபோது மீண்டும் இடநெருக்கடி ஏற்படலாயிற்று முன்போலவே நாடாளுமன்ற உறுப்பினர் உதவியால் ரூபா 85000 அரசினரிடமிருந்து கிடைத்தது. ஆயினும் வசதியான நிலமின்மையால் கட்டிட வேலைகள் தடைப்பட்டன. அயல்நில உரிமையாளர் திரு. சிவபாதம் செட்டியார் எட்டுப் பரப்பு நிலத்தை விற்க ஒப்பினராயினும் அதன் விலைக்குப் பெறுவதில் பெருந்தடங்கல்கள் ஏற்பட்டன. இந்தத் தடங்கல்களையெல்லாம் மேற்கொண்டு காணியைப் பெற்று எட்டு வகுப்பறைகளடங்கிய ஓர் இருமாடிக் கட்டிடத்தை......

அமைத்ததோடமையாது கல்லூரிக்குத் தேவையான சிறந்த விளையாட்டுத் திடலுக்கு வேண்டிய நிலத்தையும் ஒதுக்கி தலையான ஒரு சாதனையை இவர் நிலைநாட்டினார்.

இதனால் "உறுதியான உடலே உறுதியான உள்ளத்தையுடையது" என்ற இலத்தீனிய வாக்குக்கமைய இக்கல்லூரி கல்வித் துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் தனக்கென ஒரு தனியிடத்தை வகிக்க ஏதுவாயிற்று.

எழுபத்தைந்து ஆண்டுகளில் மனிதன் முதுமையடைந்து விடுகின்றான். ஆனால் இக் கல்லூரி இப்போது தான் இளமை எழில் கொழிக்க ஏறுநடை பயிலத் தொடங்கியுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் இது கண்ட வளர்ச்சி பலரையும் வியப்பில் ஆழ்த்தும் திறத்தது. இத்தகைய வளர்ச்சிக்கு அயராது உழைத்துதவிய பெருமை இன்றைய அதிபர் திரு. பூ. வெற்றிவேலு அவர்களைச் சாரும்.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரி யாழ்ப்பாண தீப கற்பத்தில் ஒரு தீப ஒளியாகத் திகழ்வதைக் காணும் போது அதன் பெருமை வெளிப்படையாகத் தெரிகின்றது. பாடசாலையின் வளர்ச்சியைக் கண்ணுற்ற நாம் தொடர்ந்து அதன் பல வகை வளர்ச்சிகளையும் கவனிப்போம். சமயத் துறையோ, விளையாட்டுத் துறையோ, கல்வித் துறையோ, கட்டிடத் துறையோ பற்றிய ஆராய்ச்சிகள் மேன் - மேலும் கல்லூரியின் வளர்ச்சியைக் காட்டக் கூடியதாகவுள்ளது.

கல்லூரியின் தாரக மந்திரம் :-

இன்றைய எமது ஈழத் திருநாட்டில் பல தலைசிறந்த கல்லூரிகள் இருக்கின்றபோதிலும் இவையனைத்தும் நாட்டின் கல்வி வளர்ச்சிக்குக் கலங்கரை ஒளிகளாகத் திகழ்கின்றன. இத்தகைய கல்லூரிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது. எமது சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் தாரகமந்திரம்....

" நலமே நாடுக
நலமே புரிக
நலமே ஒளிர்க".

என்பதாம். இத்தாரக மந்திரத்தை எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்தாலும் பல உண்மைத் தத்துவங்களை அது உணர்த்துவதை நாம் காணலாம். இவ்வுலகில் உள்ள மக்கள் அனைவரும் நன்மையையே நாட வேண்டும். உலகிலுள்ள மக்கள் அனைவரும் நன்மையை எல்லோருக்கும் புரிய வேண்டும். குமரகுரு பர சுவாமிகள் குறிப்பிட்டது போன்று "எல்லோரும் இன்புற்றிருக்க விரும்புவதேயன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே". நாம் எப்பொழுதும் நன்மையும் நலமும் தரும் தொண்டில் ஈடுபடல் வேண்டும். அதுவே ஒவ்வொருவரின் வாழ்வின் இலட்சியமுமாக அமைய வேண்டும். அவ்விலட்சியத்தை வளர்க்கும் பெருந்தீபமாக அமைந்திருக்கின்றது. இக் கல்லூரி" என் பயன் பணி செய்து கிடப்பதே" என்கின்றார். பிறிதொருவர். உலகிலுள்ள மக்கள் அனைவர்க்கும் தொண்டு புரிவதால் இன்பம் காண்கின்றார் இப் பெரியார்.

பிறர்க்கு இடர் விளைவிப்பது எத்தனை துன்பத்தை பிறருக்கு ஏற்படுத்துகின்றதோ, அத்தனை இன்பம்; நலத்தை நாடுவதனால் ஏற்படுகின்றது. இத்தகைய நலத்தை உலகம் வாழ் மக்கள் அனைவரும் நாடவேண்டும். அதனால் சமுதாயம் சிறப்படைகின்றது. இத்தகைய சிறந்த இலட்சியத்தை மாணவர்க்கும் மற்றவர்க்கும் கற்பிக்கும் ஜீவ ஊற்றாக விளங்குவது சாவகச்சேரி இந்துக்கல்லூரி. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் இக் கொள்கையைத் தமது குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

உற்றார் உறவினரின்றி இப் பரந்த உலகில் பரிதவிப்போர் எண்ணிலடங்கார். இத்தகைய அனுதரவுள்ளோர்க்கு ஆதரவு அளித்து வாழ வழி வகுத்துக் கொடுப்பது எல்லோருடைய கடமையும் இலட்சியமுமாகும். இன்றைய உலகில் ஆதரவற்றோர்க்கு ஆதரவு வழங்க ஐக்கிய நாடுகள் தாபனந் தொடக்கம் உலகெங்கும் பற்பல நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிறுவனங்களுக்கு உரித்தான இக் கொள்கையை உலகெங்கும் பரப்புவதற்கு களஞ்சிய சாலையாக விளங்குவது; எமது கல்லூரி எனில் அது மிகையாகாது. நன்மை செய்யப் பிறந்தவர்களாகிய நாம் மறந்தும் தவறு செய்யவொண்ணாது. நாம் நன்மை செய்வதால் உலகில் பஞ்சம், பசி, வறுமை தெற்றென மறையும். நாடு நல் நிலைமை அடையும். சுபீட்சம் மலரும். வறுமை, பசி, பிணி முதலியன நாட்டை விட்டே அகலும். இது திண்மை. நலம் நாடி நலம் புரியின் இப்பூவுலகெங்கும் நலம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

இந் நில வொளியில் நானிலம் சிறக்கும். நன்மை ஓங்கும். சமத்துவமும் சமநோக்கும் மிளிரும். நலமான சமுதாயம் ஒன்று உருவாகும். இத்தகைய சமுதாயத்தை உருவாக்குவதே இத்தாரக மந்திரத்தின் தத்துவமாகும். இக் கல்லூரியின் கல்வி பயிலும் மாணவர்கள் இத் தாரக மந்திரத்தைக் குறிக்கோளாகக் கொண்டு தமது வாழ்வை திண்மையுற வளம்பெற புகழடையச் செய்வார்கள், என்பது உறுதி. வாழ்வில் வாழ்வாங்கு வாழ்வதற்கு உறுதுணை புரியும் இவ்விலட்சியத்தின் அடிப்படையில் வாழ்வை அமைக்க விரும்புவார்கள். அதுவுமல்லாமல் தாம் வாழ்கின்ற வாழ்வைப் பின்பற்றி பலரும் ஒழுகும் வண்ணம் சிறப்பான வாழ்வை மேற்கொள்வர். உலகெங்கும் நலமே ஒளிர வேண்டும் என்ற திவ்விய குறிக்கோளை தனது தாரக மந்திரமாகக் கொண்ட இக் கல்லூரி வளர்ந்து பெரும் விருட்சமாகி யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மறுமலர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் கல்வி முன்னேற்றத்துக்கும் துருவ நட்சத்திரமாக விளங்குகின்றது என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

இக் கல்லூரியின் நிழலில் ஒதுங்கிக் கல்வி கற்ற ஒருவருக்கு இக் கல்வித் தாபனம் கருணை, இரக்கம், பொறுமை பிறர்நலம் விரும்பும் மனப்பாங்கு தன்னம்பிக்கை முதலிய அரும் பண்புகளை மனத்தில் பதிய வைக்கிறது. ஆகவே நான் இக் கல்லூரி யாழ்ப்பாண தீபகற்பத்தின் கல்வி வளர்ச்சியில் முன்னணியில் நிற்கின்றது. இத்தகைய கல்வித் தாபனம் மேன் ...

மேலும் வளர்ந்து மக்கள் அறியாமையை போக்கி ஞானத்தை வளர்த்து நன்னிலை அடைய உதவும்.

3. கல்லூரியின் கீதமும் அதன் முக்கியத்துவமும் :-

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, தனித்துவத்தன்மை நிறைந்த ஒரு கல்லூரி என்பதற்கு அதன் தாரக மந்திரமும் கல்லூரிக் கீதமும் சான்று பகர்ந்து வண்ணமிருக்கின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கல்லூரிக் கீதம் மாணவர்களால் இசையுடன் இசைக்கப்படுகின்றது. பக்திப் பரவசத்துடன் மாணவர்கள் இப் பாவைப் பாடுகின்றனர். இதோ அந்தக் கல்லூரிப்பா :-

பல்லவி.

வாழ்க இந்துக் கல்லூரி வாழ்கவே - வாழ்கவே
வாழ்க இந்துக் கல்லூரி வாழ்கவே - வாழ்கவே.

அனுபல்லவி

வாழ்க நம்திரு வாழ்க நம்கலை,
நாளும் நன்மையும் உண்மையும் ஓங்கவே.

சரணம்

அறமும் அன்பும் அருளும் தழைக்க
ஆன்ம நேய உணர்வு செழிக்க
உறவு கனிந்தே உயர்வு நிலைக்க
உலகில் புகழும் அறிவும் நிலைக்க
வாழ்க இந்துக் கல்லூரி வாழ்கவே - வாழ்கவே.

வாழ்க நம் இந்துக் கல்லூரி. அது ஆண்டாண்டு காலம் வாழட்டும் என்று வாழ்த்துகிறார்கள் இந்துக் கல்லூரி மாணவர்கள். மனித சமுதாயம் உலகில் உள்ள வரைக்கும் இந்துக். கல்லூரி நிமிர்ந்து நிலைத்து நிற்கும். எண்ணற்ற சிறார்கள் அதன் ஒப்பரிய நிழலில் அமர்ந்து வாழ்வின்....

சிறப்பை விளக்கும் தத்துவங்களை ஐயம் திரிபுறக் கற்பர். எப்பொழுதும் நன்மையும் உண்மையும் ஒளிவீச இந்துக் கல்லூரி வாழ்ந்து கொண்டிருக்கும். அது மாத்திரமல்லாமல் எம்பாடசாலை மூலம் உலகெங்கும் அறமும், அன்பும், அருளும் தழைக்கும்.

வெறும் ஏட்டுக் கல்வியையோ அன்றேல் செயற் திட்டக் கல்வியையோ மாத்திரம் அது பரப்புவதில்லை. ஆன்மநேய கல்வியையும் இளைஞர்கள் மனதில் பதிய வைக்கிறது. நாம் தரும் கல்வி ஆன்ம வளர்ச்சிக்கும் உதவ வேண்டும். அத்தகைய கல்வியையும் சேர்த்து - மாணவர்க்கு அளிக்கின்றது சாவகச்சேரி இந்துக் கல்லூரி. வாழ்வுக்கு வேண்டிய வளமான கல்வியுடன் ஆன்ம வளர்ச்சிக்கும் அளிக்கப்படும் கல்வியே சிறப்புடையது. பெருமையுடையது. உறவு கலந்தே உயர்வு நிலைக்க என்று குறிப்பிடும் போது உலகிலுள்ள மக்கள் அனைவரும் சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளின்றி ஒருவர் மீது மற்றொருவர் அன்பு, தயைவு, இரக்கம், பரஸ்பர நல்லெண்ணம், கூட்டுறவுடன் சிறப்பான சமுதாயம் உருவாக வேண்டும் என்பது வெளிப்படை. அத்தகைய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கு குறிக்கோளாக அமைந்துள்ளது இக் கல்லூரி. அத்துடன் இவ்வுலகில் இக் கல்லூரியின் புகழும் மக்களின் அறிவும் நிரந்தரமாக அமைய வேண்டும் என்று குறிப்பிடும் கல்லூரிக் கீதம், தென்மராட்சியில் மாத்திரமன்றி அல்லது இலங்கையில் மாத்திரமன்றி உலகில் எங்கனும் மக்கள் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் நீங்கி, பரஸ்பர அன்பு ஏற்பட்டு, ஒரு சமத்துவ சமநோக்குடைய சமுதாயம் உருவாக வேண்டுமென்பதே இக் கீதத்தின் உட்பொருளாக அமைந்திருக்கின்றது.

ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் ஆற்றலும் சிறப்பும் ஒருங்கே அமைந்திருப்பது ஒரு கல்லூரி. அத்தகைய கல்லூரி சமுதாயத்தின் நல்நோக்கத்திற்கும், நல்லுணர்வுக்கும் உந்துகோலாக விளங்குகிறது. தத்துவ ஈச ஞானிகளின் கருத்து. யாழ்ப்பாண தீபகற்பத்தின் கல்வி மறுமலர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இக்கல்லூரி உதவுவதை எவரும் அறிவர்.

மேலும் இக் கல்லூரி சமுதாயத்தின் உன்னத வளர்ச்சிக்கும், கல்வித்
தோற்றத்திற்கும், நற்பிரசைகளை உருவாக்குவதற்கும் உறுதுணையாக
விளங்குகின்றது, என்பதற்கு கல்லூரிக் கீதமே சான்று பகர்வதாய்
அமைந்துள்ளதை எவராலும் மறக்க முடியாது. "யாதும் ஊரே யாவ
ரும் கேளிர்" என்ற கூற்றிற்கிணங்க சமுதாய நல்லெண்ணத்திற்கும்,
சமுதாய உறவுக்கும் ஒரு இணைப்பாக விளங்குகின்றது சாவகச்சேரி
இந்துக் கல்லூரி. காலங்கள் ஓடலாம், சமுதாயத்திலுள்ள மக்கள்
இறப்பெனும் மரணத்திரைக்குள் மறையலாம். ஆனால் சாவகச்சேரி
இந்துக் கல்லூரி என்றும் மக்களின் அறிவுப் பசியை வேட்கையை ஆற்
றும் ஓர் ஜீவ நதியாக ஓடிக் கொண்டே இருக்கும். இவ்வுண்மையை
நாம் என்றென்றும் மறக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. என்
றென்றும் நன்புகழ் குன்றாது சமுதாயத்துக்கும், நாட்டுக்கும் ஏன் உல
கிற்கும் கூட சிறந்த பிரசைகளை, மக்கள் செல்வத்தை ஆக்கும் ஒரு
ஞான பீடமாக விளங்கிக் கொண்டிருக்கட்டும்.

. . . . . .

## அத்தியாயம் -2.

### கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சி.

சாவகச்சேரி வாழ் மக்களின் அறிவுப் பசியை ஆற்றி அவர் தம் வாழ்வின் இலட்சியங்களை சிறப்புடன் அடைய ஒளிவிளக்காக விளங்குவது இந்தக் கல்லூரி என்று கூறின் அது மிகையாகாது. நற்கல்வியின் மகிமையை விளக்க எழுந்த இந்தக் கல்விக் கூடம் நாளடைவில் கலையியல் பகுதிகளாகவும் விளங்கத் தொடங்கியது. இங்கு கல்வி கற்ற கற்கின்ற மாணவ மாணவிகள் இரு பிரிவுகளாகப் பிரிந்து கல்வி கற்கின்றனர். கலையியல் பகுதியில் கல்வி கற்கும் மாணவர்கள் நம்வாழ்விற்கு உதவும் வரலாறு, புவியியல், அரசறிவு, பொருளியல், இந்துக்கலாச்சாரம் போன்ற பாடங்களைக் கற்கின்றனர். கடந்த காலத்தின் மனித வரலாறு தற்கால மக்களின் வாழ்விற்கு எந்த அளவில் உதவுகின்றது என்பதை ஒப்பிட்டு செய்தல் அவசியம். எனவே கலையியல் கல்வி கற்கும் மாணவர் மனித வரலாறு மூலம் மக்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள், நிறைவுகள், முன்னேற்றங்கள் முதலியவற்றை அறிந்து தமது வாழ்வை வளப்படுத்த முயற்சிக்கின்றனர்.

புவியியல் மூலம் புவியின் தன்மைகள், அதன் மாற்றங்கள் - மனித வாழ்வை எவ்விதம் மாற்றியமைக்கின்றது என்பதின் உண்மைத் தத்துவங்களை மாணவர்களால் அறிந்து கொள்ளமுடிகிறது. பரந்து கிடக்கும் புவியின் தன்மைகள், இயற்கையின் செயல்கள், காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றங்கள் அம்மாற்றங்களை ஏற்படுத்துவதற்குரிய காரணிகள் முதலிய இன்னோரன்ன தன்மைகளை புவியியல் கல்வி மாணவர்க்கு ஊட்டுகிறது.

இன்றைய மாணவர்க்கு அரசு அறிவியல் மிகவும் இன்றியமையாத ஒரு பாடமாக அமைந்திருக்கிறது. அரசு அறிவற்ற மாணவர் வாழத் தகுதியற்றவராகக் கணிக்கப்படுகின்றார். நாம் வாழும் நாடு

அண்டை நாடுகளைப் பற்றியும் அவற்றின் அரசியல் தத்துவங்களையும் அறிந்திருத்தல் மிக அவசியம். இன்றைய உலக நாடுகள் பலவற்றில் பல்வேறு அரசியல் சித்தாந்தங்கள் புகுத்தப்பட்டிருப்பதை அரச அறிவியல் கற்கும் மாணவனே அறிவான். அது போன்று மனிதர்களின் உரிமைகளைப் பற்றியோ அன்றேல் கடமைகளைப் பற்றியோ கருத்து விளக்கம் செய்வது அரச அறிவியல் பாடமே. எனவே கலையியல் - மாணவனுடைய அறிவு அவனை எவ்விதம் ஒரு பயனுள்ள மனிதனாக்கிறது என்பது தெளிவாகிறது.

இதைப் போன்றே பொருளியல் கல்வியும். இன்று பொருளியல் கல்வி மிகவும் பிரதானமான ஒரு பாடமாக உயர் வகுப்புகளுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதாரத் திட்டமிடலுக்கும் அது மிகவும் உதவியை அளிக்கிறது. பொருளாதாரக் கல்வி அறிவுள்ளவர்களால் தான் பொருளாதாரத்திட்டம் இடப்படுகின்றது. பொருளாதாரத் திட்டமின்றி நாடு முன்னேற முடியாது. இன்றைய உலகில் முன்னேறியுள்ள நாடுகளை நாம் நோக்கும் போது அந்நாடுகள் பல ஐந்தாண்டுத் திட்டங்களையோ அல்லது பத்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களையோ உள்ளடக்கியதாக இருப்பதைக் காணலாம்.

மனித வளர்ச்சிக்கு சமயம் மிக இன்றியமையாத ஒரு அம்சமாக விளங்குகின்றது என்ற உண்மையை அறியாத மனிதன் எவனுமிருக்க முடியாது. மிருகங்களாக வாழ்ந்த மனிதனை மனிதனாக வாழ உதவியது சமயமே. மனிதன் நாகரிகமடைவதற்கு அது ஆற்றிய தொண்டுகள் அளவில்லை. ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் சமய வேறுபாடுகள் காரணமாக பெரும் யுத்தங்களே நடந்துள்ளன. சிலுவைப் போரும் இந்து முஸ்லீம் போர்களும் சான்றுபகர்கின்றன. எனவே கலையியல் பகுதியில் கல்வி கற்கும் மாணவர்கள் மனித வாழ்வுக்கு இன்றியமையாத பாடங்.....

கலைக் கற்பதன் மூலம் தாமும் சிறப்பான வாழ்வை மேற் கொள்வதோடு தம்மைப் பின்பற்றும் சந்ததியினரையும் வளமான வாழ்வை வாழ்வாங்கு வாழ்வதற்கு உதவுகின்றனர், என்றே கூறல் வேண்டும். ஆகவே தான் கலையியல் பகுதியும் இக்கல்லூரியில் சிறப்பாக இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கிறது. வருடந்தோறும் கணிசமான மாணவர்கள் சர்வகலாசாலைக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

1966 ஆம் ஆண்டிலிருந்து கலைப் பிரிவு மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குச் செல்கின்றனர். ஒவ்வொரு வருடமும் மாணவர் தொகை கூடிச் செல்வதைக் காணும் போது சாவகச்சேரி இந்துக் கல்லூரி எத்தனை பட்டதாரிகளை உருவாக்கியுள்ளதென ஆச்சரியப்படத்தக்க வகையில் உள்ளது. 1966 ஆம் ஆண்டு ஒரு மாணவன் முதன் முதல் பல்கலைக் கழகத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டான். அதைத் தொடர்ந்து 1967 இலும் ஒரு மாணவன் மட்டும் தெரியப்பட்டு அது பின் படிப் படியாக உயர்ந்து 1971 இல் 17 ஆக உயர்ந்தது. அதையும் மிஞ்சும் வகையில் 1975,1977 இல் 18 கலைப் பிரிவு மாணவர்கள் ஒரேயடியாக பல்கலைக் கழகம் சென்றனர்.

விஞ்ஞான வியல்:-

இருபதாம் நூற்றாண்டை விஞ்ஞான சகாப்தம் என்று கூறின் அது மிகையாகாது. விஞ்ஞானத்தின் உதவியுடன் இன்றைய மனிதன் இயற்கைக்கும் சவால் விட்டுள்ளான். பூமியிலிருந்து பல கோள்களுக்கு யாத்திரை செய்கின்றான். சந்திர மண்டலத்தை வென்று விட்டான். வானவெளியில் மாதக் கணக்கில் சுற்றி வருகின்றான். இன்று வேறு பல கோள்களுக்கும் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளான். ஐரோப்பாவில் எல்லாம் விஞ்ஞான மயமாக்கப்பட்டிருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. உணவைச் சமைப்பதிலிருந்து போக்குவரத்து வரை சர்வமும் விஞ்ஞானமயமே.

ஆகவே தான் எமது கல்லூரியிலும் விஞ்ஞானக் கல்விக்கு மதிப்புத் தந்து அதை ஒரு பகுதியாக அமைத்துள்ளார்கள். கலையியல் பகுதியும், விஞ்ஞானவியல் பகுதியும் அக்கம் பக்கமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. இன்றைய குழந்தைகளுக்கு விஞ்ஞானம் கல்வியின் தேவையை உணர்ந்து அக்கல்விக்கு முதலிடம் தந்து திறமையுள்ள விஞ்ஞான பட்டதாரிகளை நியமித்து, மாணவரின் விஞ்ஞானக் கல்வி அறிவை எமது கல்லூரி நாள் தோறும் வளர்த்துக்கொண்டு வருகின்றது.

விஞ்ஞானக் கல்வியின் வளர்ச்சிக்காக விஞ்ஞானப் பகுதி மாணவர்கள் மாதந்தோறும் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகின்றனர். அத்துடன் வெளியில் இருந்தும் பல விஞ்ஞான அறிவாளர்களைத் தருவித்து உரையாற்றவைக்கின்றனர். கலையியல் மாணவர்கள் சிந்தைக்கு விருந்தளிப்பதற்கு பல கருத்தரங்குகளையும், தர்க்கங்களையும் இடம் பெறச் செய்து தமது அறிவையும் தர்க்க மிகும் ஆற்றலையும் வளர்க்கின்றனர். அத்துடன் பாடசாலையின் புகழையும், சிறப்பையும் மேலோங்கச் செய்கின்றனர். இக்கல்லூரி ஒரு பகுதியில் மட்டுமன்றி பல பகுதியிலும் சமவளர்ச்சியடைய உதவி அதன் காரணமாக மாணவரின் பூரண அறிவையும் பூரணமடையச் செய்கின்றது.

இன்றைய கல்வித் திட்டத்தின் அடிப்படையில் பல தொழில் முன்னிலைப் பாடங்களையும் இக்கல்லூரி மாணவர்க்கு கற்பித்து வருகின்றது. குறிப்பாக மோட்டார், இயந்திரவியல், நெசவு, மரவேலை போன்ற பாடங்களைக் கற்பிப்பதனால் மாணவர்கள் அப்பாடங்களின் உதவியுடன் தமது வருங்கால வாழ்க்கையை வளமாக்குவதற்கு முயன்று வருவதைக் காணும் போது எம்மால் பெருமை அடையாமல் இருக்க முடியவில்லை. இத்தகைய சிறப்பான வளமான முன்னேற்றங்களை இக்கல்லூரி தென்மராட்சி வாழ் மக்களுக்கு அளித்து வருகின்றது.

விஞ்ஞானக் கல்வியையும் நாம் கலைப்பரிவோடு ஒப்பிட்டு நோக்கையில் அதன் அளவும் உயர்ந்து வருவதைக் காணக்கூடியதாயுள்ளது. வருடாவருடம் மாணவர்களை பல்கலைக் கழகத்துக்கு அனுப்பும்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி 1973 ஆம் ஆண்டு முதல் முதலாக ஒரு மாணவியை பல்கலைக் கழகத்துக்கு வைத்தியத் துறையில் அனுப்பியது. அன்று பல்கலைக் கழகத்துக்கு போக ஆரம்பித்த மாணவர்கள் தொடர்ந்து இன்று வரை சென்று வருவதனை நாம் காணக் கூடியதாயுள்ளது.

1973 இனைத் தொடர்ந்து 1974இலும் ஒரு மாணவனை அனுப்பிய கல்லூரி தொடர்ந்து 1975,1976 இல் 3 மாணவர்களை அனுப்பிவைத்தது. படிமுறை வளர்ச்சியைத் தொடர்ந்து யாழ் தொகுதி மக்களையே ஆச்சரியப்பட வைக்கத்தக்கதாயும், சாவகச்சேரி மக்களி மகிழ்ச்சிப் பெருங்கடலில் பூரித்துத் திளைக்கத் தக்கதாயும் 1977இல் 14 மாணவர்கள் பல்கலைக் கழகம் புகுந்தனர். அதே நேரம் கலைப் பிரிவில் 18 மாணவர்களாக எல்லாமாக எமது பாடசாலையிலிருந்து 32 மாணவர்கள் பல்கலைக் கழகம் புகுந்தனர்.

இத்தகைய வளர்ச்சிப்போக்கே இன்று யாழ் எங்கும் அதன் பெயர் எதிர்த்தொலிக்கவும், பெற்றோர் பூரித்து மகிழவும் காரணமாயிற்று. பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையை நாம் கருத்தில் கொண் டாலும் 1960 இலிருந்து நாம் கவனித்துக் கொண்டாலும் வருடா வருடம் உயர்ந்து சென்றதையே காணலாம்.

கீழ்ப்பிரிவு மாணவர்களை நாம் கருத்தில் கொண்டாலும் 1960 இல் 1ம் வகுப்புக்கும் 5ம் வகுப்புக்கும் இடைப்பட்ட மாணவர் தொகை 473 ஆக இருந்து 1979இல் 751 ஆக உயர்ந்தது. இத் தகைய இருமடங்கு வளர்ச்சியே இக் கல்லூரியின் எழுச்சிக்கு அடியிட்டது. எனலாம். இதை விடுத்து உயர்தர வகுப்பு மாணவர்களை நாம் கருத் தில் கொண்டு நோக்க 1960 இல் 22 மாணவர்களாக இருந்த - தொகை 1979 இல் 528 ஆக உயர்ந்ததும் 24 மடங்கு விரிவு எத் தகைய வளர்ச்சி என்பது சொல்லிப் புரியவைப்பதல்ல. அத்துடன் கல் லூரி மாணவர்கள் தொகையை கவனிக்க 1960 இல் 1068 மாணவர் களே பாடசாலையில் இருந்தனர். 1979 இல் நோக்குவோமாயின்.....

2241 மாணவர்கள் கல்விகற்றனர். இன்று மேலும் மாணவர் தொகை கூடிச் செல்கின்றது.

கல்லூரியின் சங்கங்கள்

கல்வி, விளையாட்டுத் தொகுதிகளில் மாத்திரம் நிறைவு காண்ப தோடு நில்லாமல் இயல், இசை, நாடகமென அழைக்கப்படும் முத்தமிழ் களிலும் நிறைவு கண்டது எமது கல்லூரி. விசேடமாகப் பிள்ளைகளின் - இசையறிவை வளர்த்து இசையுடன் வாழவைப்பதற்கு விசேடம் பயிற்சி பெற்ற இசையாசிரியர்கள் இக் கல்லூரியில் உண்டு. காலைப் பிரார்த் தனையில் பங்கு கொண்டு மாணவிகள் இசையுடன் தேவாரப் பண்களை இசைக்கும் போதும் கல்லூரிக் கீதத்தைப் பாடும் போதும் அவ்விசையில் மயங்காதவர் எவரும் இல்லையென்றே கூறலாம். இசையை அநுபவிப்ப தற்கும் இசையுடன் பாடுவதற்கும் பயிற்சி பெற்றுள்ளனர் என்பதை கூறிக் கொள்ள ஏதுவாகிறது. முதற்தரமான இக்கல்லூரியில் கற்பிக்கப்படும் கல்வி, பயிற்றப்படும் உடற்கல்வி, இசையெல்லாமே முதற்தரம் வாய்ந்தவை களாக இருப்பதனால் இங்கு கற்கும் மாணவ மாணவிகள் எல்லோரும் சகல கலைகளும் வாய்க்கப் பெற்ற மக்களாக இருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் நிகழும் பரிசளிப்பு விழாவில் தரமான சங்கீத நிகழ்ச்சியாக விளங்கும் கர்நாடக சங்கீதமும், நாடகங்களாக அமைகின்ற ஆங்கில, தமிழ் நாடகங்களும் எல்லோராலும் மதிக்கப்படுகின்றது. இத் தகைய வளர்ச்சி கல்வி கற்கும் மாணவர்க்குப் பெரிதும் பயனளிக்கின்றது எனலாம்.

சமயக் கல்வி.

இந்துக் கல்லூரி என்ற பெயருக்கிணங்க சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சமயம் என்பது தலையாய ஒரு பாடமாகக் கற்பிக்கப்படு கின்றது. ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்தரம் வரை சமயபாடம் ஒரு......

பாடமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. அதே போல் சமயப் பண்டிதர்கள் திரு. வேலுப்பிள்ளை, திரு. சிதம்பரநாதன், திரு. சபா ரத்தினம் போன்றோரும் கடமையாற்றி வந்தார்கள், வருகிறார்கள். வேறு பாடங்களில் மாணவர் திறமை குறைவாகக் காணப்பட்டாலும் சமய பாடத்தில் எந்த மாணவனும் சித்தியடைந்து வருவதை இக்கல்லூரியில் காணலாம். அதாவது க.பொ.த. உயர்தரம், சாதாரண தரம் இரண்டையும் நோக்கின் மிக அதிதிறமைச் சித்தியை இப் பாடத்தில் பெற்றிருப்பதை அவர்கள் பெறுபேறுகளிலிருந்துகாணலாம். அதே நேரம் "விவேகானந்தா சபையால்" நடாத்தப்படும் சமய பாடப் பரீட்சையைக் கவனித்தால் நாம் இக்கல்லூரியின் சமயக் கல்வியை விளங்கலாம். 1975 இலிருந்து நோக்க ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் சித்தியடைந்து வந்துள்ளார்கள். இக்கல்லூரி மாணவர்களின் ஓர் சிறந்த அம்சம் இவ் விவேகானந்தா பரீட்சையில் பங்கு பெற கூடிய ஆர்வம் கொண்டிருப்பதேயாகும். ஒருவனுடைய வாழ்க்கையின் பல படிகளிலும் மணவாழ்க்கையே முதன்மையும் சிறப்பும் வாய்ந்தது. ஒருவன் தன் பின் வாழ்வை உருப்படுத்திக்கொள்ளும் பருவம் இதுவே. ஆகையால் இது சமய அடிப்படையில் அமைய வேண்டும் என்பது இன்றியமையாதது. எங்கள் கல்லூரி இத்துறையில் கூடிய ஆர்வம் காட்டுவது பாரம் பரியமானது. "கற்றல்..கேட்டல் - கோயிற் பழக்கம் ஆகிய மூன்று சமயத்துறைகளும் நன்கு கவனிக்கப் படுகின்றன. குடாநாட்டிலேயே க.பொ.த. சாதாரண பரீட்சையில் எமது கல்லூரி முத்தமிழிலும் சமயம், தமிழ், இலக்கியம் போன்றவற்றில் முதன்மை பெற்று விளங்குவது யாவரும் அறிந்ததே. இந்து மாணவர்கள் கொழும்பு விவேகானந்தா சபைப் பரீட்சையில் திறமையான சித்தி பரிசில்களைப் பெற்று வருவதுடன் திருமறைக் கழகம் நடத்தும் திருக்குறள் பரீட்சையும் பலமாணவர்களால் எழுதப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாணம் "சேக்கிழார் .....

மன்றம்"வைக்கும் பெரிய புராணப் போட்டிப் பரீட்சைகளில் பலர் சான்றிதழ்களும் பரிசுகளும் பெற்றிருப்பதோடு, சிலர் தங்கப் பதக்கமும் பெற்று வந்துள்ளனர். சைவ சமயத் தத்துவங்களைக் கேள்வி மூலம் மாணவர் பெறுவதற்காகப் பல சைவப் பெரியார்கள் கதாப் பிரசங்கங்களும், விடயகப் பிரசங்கங்களும் செய்துள்ளனர். சைவ உணர்ச்சி ஒரு நாளில் அல்லது ஒரு தருணத்தில் உண்டாவதன்று. மாணவ வாழ்க்கையே சைவ வாழ்க்கையாக மாறவேண்டும். இங்கு கல்லூரி நாள் தோறும் தேவார பாராயணத்துடனும், கடவுள் வணக்கத்துடனுமே ஆரம்பமாகிறது. வெள்ளிக் கிழமைதோறும் சமயப் பிரசங்கங்கள் நிகழ்கின்றன. கல்லூரி வைபவமெதிலும் அந்த சைவ போசனமே வழங்கப்படுவன. புலால் கலக்கப்படுவதில்லை. விபூதி சந்தனத்திற்கு வேண்டிய மகிமை அளிக்கப்படுகிறது. சைவ விரத அனுட்டானங்களுக்குப் போதிய வசதிகள் அளிக்கப்படுகின்றன.

சைவ உணர்ச்சியோடு சைவப் பெருமகான் தாமோதரனால் உருவாக்கப்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி தன் பெயருக்கேற்ப அவ்வுணர்ச்சி குன்றாது வளரவும், மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கவும் இறைவன் அருள் புரிவாராக!

சைவப் பணிகளும் சமயக் குழுவும்.

சைவமும் தமிழ் மொழியும் சிறக்கப் பணியாற்றி வருவது இந்துக் கல்லூரியின் சமயக் குழுவெனில் அது மிகையாகாது. சரஸ்வதிப் பூசை, சமய குரவர்களின் குரு பூசைகள் போன்ற விழாக்களைச் சிறப்புடன் ஆற்றி வருவது சமயக் குழுவாகும். பதினொரு உறுப்பினரைச் கொண்ட இக்குழு தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு விடயம் செய்யும் சமயப் பெரியார்களை வரவேற்று சமயச் சொற் பொழிவுகளை நிகழ்த்தி மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் பயனடையச் செய்வது சமயக் குழுவாகும்.

சரஸ்வதி பூசை பத்து நாட்களும், சமயப் பிரசங்கங்களும், இன்னிசைக் கச்சேரியும் வழக்கமாக நடைபெற்று வருகின்றன. இத்தகைய சிறப்பான சேவையை இக்குழு நிகழ்த்துவதனால் சைவமும், தமிழும் மேன்மேலும் நன்னிலையை அடைந்த வண்ணமாக இருக்கின்றன. தமிழ் மக்களின் இரு கண்களாக விளங்கும் சமயமும், தமிழும் தழைத்து ஓங்க நற்சேவையை ஆற்றும் சமயக் குழுவையும் அதன் தலைவர், செயலாளர்களைப் போற்றுமல் இருக்க முடியாது.

கல்லூரியின் சமயக் குழு தினமும் காலை ஆராதனையும் நவராத்திரிப் பூசைகளையும் சைவ நாயன்மாரின் குருபூசைகளையும் செவ்வனே நடாத்திக் கல்லூரியின் சமய வளர்ச்சிக்கு அரும், பெருந் தொண்டாற்றி வருகின்றது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் அறிஞர்களையும், சமயப் பெரியார்களையும் இக் கல்லூரிக்கு அழைத்து, நாமும் அவர்களது அறிவுரைகளைக் கேட்டுப் பயன்பெற உதவும். யாழ்ப்பாணம் திவ்யஜீவன சங்கத்திற்கும் இக்கல்லூரி என்றும் கடமைப்பாடுடையது. 1971 ஆம் ஆண்டில் சுவாமி சாந்தானந்தா, சிவானந்த முனீஸ்வரர், பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள் ஆகிய பெரியார்கள் எமது கல்லூரிக்கு வருகை தந்து சிறந்த அறிவுரைகளையும் வழங்கினார்கள். திரு. எம். ரி. சுப்பிரமணியம் அவர்களால் அன்பளிக்கப்பட்ட திறந்த வெளியரங்கு பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டதுடன் அவரது கோஷ்டியினரின் பஜனையும் இடம் பெற்றது.

சமயக் கல்வியைப் போதிப்பதிலும் அத்துறையில் சாதனைகளை நிலைநாட்டுவதிலும் இக்கல்லூரி முதலிடம் வகித்து வருகின்றது. விவேகானந்தா சபை நடாத்தும் சமய பாடத் தேர்வுகளில் மிகத் தரமான பெறு பேறுகள் இக் கல்லூரிக்குத் தொடர்ந்து கிடைத்து வருகின்றன. திருக்கேதீஸ்வரத் திருவிழா ஒன்றில் ஆண்டு தோறும் பங்குபற்றி அதனைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது.

சிவராத்திரி நாட்களில் திருக்கேதீஸ்வரத்துக்கு மாணவர்களை அழைத்துச் செல்கின்றனர். அதே நேரம் சாரணர் இயக்கத்திலுள்ள மாணவர்கள் கோயிலில் நற்பணி செய்கின்றார்கள். நவராத்திரிப் - பூசை காலத்தில் கும்பம் வைத்து பத்து நாட்களும் ஒவ்வொரு வகுப்பு மாணவர்கள் விழா நடாத்துகின்றார்கள். சமய சம்பந்தப்பட்ட நாடகங்கள், சங்கீதங்கள், பேச்சுக்கள் ஆகியவற்றை நடாத்துவர். சைவ சமய முறைப்படி ஜோடனை யாவும் செய்து தமது கல்லூரியின் "இந்துக் கல்லூரி" என்ற பெயரை மேலும் விளங்கச் செய்து வருகின்றனர்.

நவராத்திரி பத்தாம் நாள் சிறுவர்களுக்கான ஆரம்பக் கல்விக்கான ஏடெழுதும் நிகழ்ச்சியையும் நடாத்துவர். சைவ சமய நிகழ்ச்சியில் ஏற்படும் முக்கிய விரத நாட்களில் மாணவர்கள் நலன் கருதி லீவு அதாவது விடுமுறை கொடுக்கப்படுகின்றது. இதே போன்று இவ் வைபவங்கள் நடைபெறும் காலங்களில் மாணவர்கள் தொடக்கம் ஆசிரியர்கள் வரை இந்து சமய முறைப்படியான ஆடைகளையே அணிகின்றனர். இச் சமயம் பாடசாலையை நோக்கில் அது ஓர் கோயிலாகவே திகழ்ந்து கொண்டிருப்பதை நோக்கலாம்,

இந்துக் கல்லூரியின் மாணவர்கள் தொகையை நோக்கினும் இங்கும் பெயருக்கேற்ப இந்து சமய மக்களே கூடவாகும். நூற்றுக்கு ஒரு வீதம் தான் கத்தோலிக்க மதத்தவராகவோ அல்லது முஸ்லீம் மக்களாகவோ இருப்பதைக் காணலாம். ஆசிரியர்களை நோக்கினும் ஒரு வீதத்திலும் குறைவாகவே வேற்று மதத்தினர் காணப்படுவர். இதுவே சைவ சமய வளர்ச்சிக்கு காலாகின்றது.

அகில இலங்கை ரீதியாக இடம்பெறும் திருக்குறள் போட்டியிலும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி முக்கிய பங்கெடுப்பதோடு.......

.

அல்லாமல் நல்ல இடத்தையும் பெற்று பல பரிசில்களையும் நட்டியுள்ளது. வருடா வருடம் இடம்பெறும் திருக்குறள் போட்டியில் பங்கெடுத்து வெற்றி பெறச் செய்வதற்காகவே சமயத்துறை ஆசிரியர்கள் நல்ல முறையைக் கையாண்டுள்ளார்கள். அதாவது நாளாந்தம் கல்வி கற்பிக்கும் பலகையில் ஒவ்வொரு திருக்குறள் வீதம் எழுதுவது என்பது இம் முறையே ஒன்றும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. இம் முறை ஏனைய பாடசாலைகளுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைவதோடு மாணவர்கள் நல்வழியில் செல்லவும் வழி செய்கின்றது.

காலையில் நாளாந்தம் நடக்கும் காலை வணக்கத்தின்போது அப் பெரிய மண்டபத்துக்குள் கல்வியைக் கொடுக்கும் சரஸ்வதியை வைத்திருப்பதுடன் சிறுவர் மனத்தில் பதியும் வண்ணம் அப்படத்தைமிகப் பெரிதாக வைத்து அதன் முன் நின்றே காலை வணக்கத்தை செய்கின்றனர். அத்துடன் சில ஆசிரியர்கள் தமது வகுப்புக்களில் சிறுவர்கள் வைத்து வணங்கும் படங்களுக்கு ஆதரவு அளிக்கின்றனர். பெருமளவு சிறுவயதினரே இவ்வாறு செய்து கொண்டிருப்பதை நாம் இக்கல்லூரியில் காணலாம். வீட்டிலிருந்து வரும்போது சாமிக்குத் தேவையானதைக் கொண்டு வந்து மிகவும் தூய்மையான முறையில் யாவற்றையும் செய்கின்றனர். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கிணங்க குழந்தைகள் மனத்தை ஆரம்ப காலத்திலே நல்வழிப்படுத்துகின்றனர்.

இந்து சமய மக்களின் கிழமை நாட்களில் முக்கிய நாளாக வெள்ளிக் கிழமை கருதப்படுகின்றது. இந்நாள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் ஓர் முக்கிய நாளாகக் காணப்படுகின்றது. பெண்களை நோக்கும் போது அவர்கள் அன்று தலையில் முழுகி, பூவிட்டு பொட்டிட்டு வருகின்றார்கள். அதே போல் ஆண்கள் பொட்டிட்டு வேண்டி....

அணிந்து மிகவும் தூய்மையாக வருகின்றார்கள். இதே போல் அன்று ஆசிரியர்களிலும் ஒரு புதுவிதப் பொலிவைக் காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் அன்று ஒரு சைவ சமய சொற்பொழிவு நடப்பதையும் காணக்கூடியதாயிருக்கின்றது. ஆரம்ப காலத்திலிருந்தே சைவ மக்களின் முக்கிய பாடசாலையாக விளங்கிய இப்பாடசாலை சமய முறையை கைவிடாது பேணி வருவதையிட்டு இன்றும் நாம் பெருமிதம் அடைந்து வருவதில் எந்தத் தவறும் இல்லை.

எவ்வளவோ நாகரீகம் ஏற்படுகின்றது. புதுவித உடைகள் ஒவ்வொரு விதத்தில் தோன்றுகின்றது. எனினும் இத்தாக்கம் ஒரு போதும் எமது கல்லூரியைத் தாக்கவில்லை. மாணவர்களை மட்டுமல்ல, ஆசிரியர்களை மட்டுமல்ல, அதிபரைக் கூட அது ஒரு விதத்திலும் பாதிக்கவில்லை. இதில் நாம் பெருமைப்படுவது தற்போது எமக்கு அதிபராயுள்ள திரு. பூ. வெற்றிவேலு அவர்கள் வேஷ்டி சகிதம் அன்று பாடசாலைக்கு சமுகம் அளிக்கையில் அவ்வுடை அவரது இயற்கை எடுப்புக்கு மேலும் எடுப்பாகத் திகழ்ந்து விடுகின்றது. ஆசிரியர்கள் ஒரு பக்கமும், ஆசிரியைகள் ஒரு பக்கமும், மாணவர்கள் நடுவிலும் அதிபர் ஒரு நிலையிலும் இருக்க அம் மண்டபம் என்றும் கண்கொள்ளாக் காட்சியாகவே விளங்குகின்றது.

இவ்வாறு சமயத்துறையை நோக்கும் போது சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஒரு பதுமையான ஒன்றாகவும், பழமையைப் பேணும் ஒன்றாகவும், பெயருக்கேற்ப தன் இடத்தைப் பாதுகாக்கும் ஒன்றாகவும் விளங்குகின்றது. சமயத்துறையில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் இக் கல்லூரி ஒரு முக்கிய இடத்தைப் பெறுவதும் பின்வருவனவற்றால் அறியக் கூடியதாயுள்ளது.

பெரியார் திரு. வி. தாமோதரம்பிள்ளை அவர்கள் எமது கல்லூரியை எந்த நோக்கங்கொண்டு நிறுவினரோ அந்த நோக்கம் நன்கு நிறைவேறும் வகையில் இன்று தென்மராட்சிப் பகுதியில் மட்டுமல்ல .....

வடமாகாணத்தில் மட்டுமல்ல நாடு முழுவதிலுமேயே முதன்மை வாய்ந்த கல்லூரிகளுள் ஒன்றாக இக்கல்லூரி திகழ்ந்து கொண்டிருக்கின்றது. சைவ சமயச் சூழலில் மாணவர்கள் கல்வியூட்டப்படுவதால் லௌகீக, ஆத்மீக வாழ்க்கைக்கு இன்றியமையாத நற்பண்புகள் வளர்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பகிரங்கப் பரீட்சைகளிலும் பல்வேறு போட்டிகளிலும் எமது மாணாக்கர் சிறப்பான பெறுபேறுகளை ஈட்டி வருவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. கொழும்பு விவேகானந்தா சபையால் நடாத்தப்படும் சமய பாடப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் தொகையிலும், அதில் சித்தி பெறும் தொகையிலும் எமது கல்லூரி அகில இலங்கையிலும் தொடர்ந்து பல ஆண்டுகளாக முதலாவது இடத்தைப் பெற்று வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் மாணாக்கரின் சமய அறிவை வளர்ப்பதில் அயராது உழைக்கும் சமயபாட ஆசிரியர்களின் பணி பாராட்டற்குரியது.

போதனையில் மட்டுமன்றிச் சாதனையிலும் சமய அறிவையும் சமய உணர்வையும் ஊட்டும் முகமாக வருடா வருடம் கல்லூரி மாணாக்கர்களில் நூற்றுக்கணக்கானோர் திருக்கேதீஸ்வர வருடாந்த உற்சவத்தின் போது அங்கு சென்று கல்லூரி உபயமாக நடாத்தப்படும் திருவிழாவில் சிறப்பாகப் பங்கு பற்றி வருவது எமது கல்லூரி முயற்சிகளுள் முக்கியம் வாய்ந்ததாகும்.

சென்ற ஆண்டு செப்பனிடப்பட்ட எமது கல்லூரி பிரதான மண்டபத்திற்கு முன்னாட் கல்லூரி அதிபர்களுள் ஒருவரானவரும் பிரதான மண்டபத்தை நிறுவியவருமான திரு. ந. அருணாசலம் அவர்களை நினைவூட்டும் வகையில்" அருணாசலம் மண்டபம்" எனப் பெயரிட்டதோடு சென்ற ஆண்டு நடைபெற்ற நவராத்திரி விழாவின் போது அம்மண்டபத்தில் கல்வித் தெய்வமாம் கலைமகள் சிலைத் திறப்பு விழாவும் நடைபெற்றது.

சிலையினைத் திரு. ந. அருணசலம் அவர்களின் புத்திரியும், சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் துணைவியுமான திருமதி. இரகுபதி நவரத்தினம் திறந்து வைத்தார்கள். சிலைத் திறப்பு விழாவிலே-பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்களின் ஆசியுரையும், சிவத்தமிழ்ச் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமயச் சொற்பொழிவும் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. வழமைபோல் வெள்ளிக் கிழமை தோறும் காலை வழிபாட்டினைத் தொடர்ந்து நற்சிந்தனையைத் தூண்டும் சொற்பொழிவுகள் ஆசிரியர்களால் நிகழ்த்தப்படுகின்றன. மாணக்கரின் ஆங்கிலத் தேர்ச்சியைத் தரமுயர்த்தும் முகமாக மாதமொருமுறை ஆங்கிலச் சொற்பொழிவுகளும் இடம் பெற்று வருகின்றன. உயர்நிலை மாணக்க மன்றங்களின் அனுசரணையுடன் மாணக்கர் சிலரின் சொற்பொழிவுகளும் பருவத்துக்கு மும்முறை இடம் பெற்று வருகின்றன. இத்தகைய முயற்சிகளால் மாணக்கரிடையே நற்பழக்க வழக்கங்கள் விருத்தியடைய வழிகோலப்பட்டுள்ளது.

நாயன்மார் குருபூசைகள் பெரியார்களின் நினைவு தினங்கள் நவராத்திரி விழா போன்றனவும் அடக்கமான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றன. சமயக் குழுவின் சகல முயற்சிகளுக்கும் தக்க ஆலோசனைகளைத் தந்து தம்மாலான ஒத்துழைப்பை நல்குகின்றன. இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆரம்பித்த நாள் தொடங்கி இன்றுவரை தனது பெயருக்கேற்ப சமயத்தை நிலை நாட்டி வருகின்றது.

......

<u>இக் கல்லூரி நூலகம், கல்வி வளர்ச்சிக்கு வழி காட்டும் விதம்.</u>

அறிவு வளர்ச்சிக்கான சாதனங்களில் முன் நிற்பவை நூலகங்களேயாகும். பொதுமக்களுக்கு அறிவூட்டும் சாதனங்களான புதினத்தாள், வானொலி, தொலைக்காட்சி போன்றன அதிகரித்துள்ளது. இந்நூற்றாண்டிலும் கூட நூல்கள் மக்களுக்கு அறிவூட்டும் திறத்தை இழந்த ....

விடவில்லை. அறிவு மிக வேகமாகப் பல்கிப் பெருகும் இந்நாளிலும் நூல்களின் பயன் எண்ணிலடங்கா. ஒருவரின் தனித்தன்மையைப் பேணு வதிலும் ஆளுமையை வளர்ப்பதிலும் நோழுங்கு துணை நிற்பதிலும் - நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன.

நூல்களைச் சேகரித்து அவற்றை தொகுத்து காத்து அறி வூட்டும் பணியில் ஈடுபடுவன நூலகங்கள். இன்று கல்வியின் பெரும்பகுதி பாடசாலைகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் புறத்தே இருந்த லால் அறிவூட்டுவதில் நூலகங்களின் பங்கு மிகப் பெரியது. வாசகர் களுக்கு வேண்டியபோது தகவல்களைக் கொடுத்தும் தகவல்களைப் பரப்பியும் நூல்களையும், வாசிப்புக்குகந்த வேறு வெளியீடுகளையும் நேரடியாகக் கையாளவும் உதவும் ஓர் அமைப்பே பொதுவாக நூலகம் என்று அழைக்கப்படுகிறது. நூல்கள் பருவ இதழ்கள், செவிப் புல கட்புல விடயங்கள் ஆகியவற்றையும் செய்திச் சேவைகளையும் பரவச் செய்வதற்கும், வாசகர்களின் சுவைக்கும் திறன்மெருகூட்டுவதற் கும் நூல் நிலையங்கள் பெருந் தொண்டாற்றி வருகின்றன. பொது நூலகங்களை விடப் பாடசாலை நூலகங்கள் இளம் சிறாரின் சிந்தனை விருத்திக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் வித்திடும் கலைக் கோயி லாக இருத்தலால் அவற்றில் கவனம் செலுத்துவது மிக அவசியமா கிறது.

தற்பொழுது இலங்கையிலுள்ள சுமார் பத்தாயிரம் பாடசாலை களில் மிகச் சிலவற்றில் மட்டுமே முறையாக அமைக்கப்பட்ட நூலகங் கள் இயங்கி வருகின்றன. பாடசாலை நூல் நிலையங்கள் சமுதாயத்தின் அன்றாடப் போக்குகள், நடைமுறைகள், பிரச்சினை என்பன பற்றியும் கல்வி, பண்பாடு, அறிவியல் ஆகிய குறைகளில் மாற்றங்கள் பற்றியும் - மாணாக்கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தகவல்களை வழங்குவது மட்டு மன்றி ஆய்வுக்கான நிலைக்களனாகவும் விளங்குகின்றன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூலகம் அண்மைக் காலத்தில் பெருவளர்ச்சி பெற்ற கல்லூரி உறுப்புகளுள் ஒன்று. இந்நூலகத்தின் ஆரம்ப காலத்தில் கல்வித் திணைக்களத்தினாலும், பெற்றோர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோராலும் வழங்கப்பட்ட 2000 வரையிலான பல்வேறு நூல்களோடு இதுவரை ஆரம்பித்தது. நூலக விருத்திக்கு அதிபர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம், கல்லூரியின் நலன் விரும்பிகள் ஆகியோர் ஆற்றிய பணிகள் நினைவுகூரத்தக்கன. எனினும் நூலக சேவை ஓரளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்து வந்தது. இந்நிலை 1970 ஆம் ஆண்டின் பின்னர் பெரிதும் மாற்றமடைந்து வந்தது. இத்தகைய நன்மாற்றத்திற்கு வித்திட்டவர் இந்நாள் அதிபர் திரு. பூ. வெற்றிவேலு அவர்களே.

அதிபர் அவர்களின் வழிநடத்தலாலும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் பழைய மாணக்கர் சங்கம் ஆகிய அமைப்புகளின் விடா முயற்சியாலும் நூலகம் துரிதமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டிட மொன்றை நூலகத்துக்கு அமைத்துத் தந்தனர். மேற்கு ஜேர்மனி தூதரகச் செயலாளர் செல்வி. உர்சுலா முல்லர் அவர்கள் நூலக புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். புதிய கட்டிட வசதி காரணமாக வாசகர்களுக்கு உடனுதவும் பகுதி, இரவல் கொடுக்கும் பகுதி என இரு பிரிவுகளாகச் சேவையாற்றும் வாய்ப்புப் பெற்றது. ஆசிரியர்களும், மாணக்கர்களும் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன்பெறத் தொடங்கினர். தற்பொழுது 1500 மாணக்கர்கள் உறுப்பினராகச் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர். மாணக்கர்கள் ஓய்வு நேரத்தில் நூலகத்தைப் பயன்படுத்துவது மட்டுமன்றி நூலக அட்டையைப் பயன்படுத்தி இரவல் பெறும் பகுதியிலிருந்து நூல்களைப் பெற்றும் வாசித்தும் வருகின்றனர்.

க.பொ.த. உயர்நிலை மாணக்கர்களுக்கு உடன் உதவும் பகுதி பெரிதும் பயன்விளைவித்து வருகின்றது. எமது நூலகத்தில் 8500 க்கும் அதிகமான நூல்கள் உள்ளன. காலத்தால் அழியாத கருத்துக்களின் கருவூலங்களாக உள்ள நூல்கள் புதிதாக பதிப்புப் பெறாத பல நூல்கள் மிகவும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்களுக்கென வெளிவந்த துணை நூல்கள் எனப் பலவகையின உள்ளன. இந்நூல்கள் மாணக்கர் ஆசிரியர் பாடத்திட்டத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு மாணக்கரின் வாசிக்கும் பழக்கத்தையும் அவர்களின் தனித்துவம், ஆளுமை ஆகியவற்றையும் விருத்தி செய்கின்றது. மேலும் புதிய நூல்களைப் பெறுவதற்காகவும் நூலகத்தை நிர்வகிப்பதற்காகவும் ஆண்டுதோறும் 5000 ரூபாவுக்கு மேலாகச் செலவு செய்து வருகின்றோம்.

நூலகங்களைப் பயன்படுத்துவதால் மாணக்கர்கள் தக்க பயிற்சி பெறுவதற்காக டூயியின் தசாம்ச அடிப்படையில் நூல்கள் பகுக்கப்பட்டுத் தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை...

(1) பொதுக் கலைக் களஞ்சியம், பொது சஞ்சிகைகள், வாழ்க்கைச் சரிதம்.

(2) தத்துவம்.

(3) சமூகவியல்.

(4) மொழியியல்.

(5) விஞ்ஞானம்.

(6) தொழில்துறை விஞ்ஞானம்.

(7) கலைகள்.

(8) இலக்கியம்.

(9) வரலாறு, புவியியல், பிரயாணம்.

என்னும் தலைப்புகளுள் அடங்கும். சஞ்சிகைகளுக்கென தனியாக ஒரு பகுதியை ஒதுக்க இடவசதி போதாதிருப்பினும் எமது நூலகத்தில் எண்ணற்ற வார, மாத, உள்நாட்டு, வெளிநாட்டு, தமிழ், ........

ஆங்கில சஞ்சிகைகள் உள்ளன. எதிர்காலத்தில் தனியான சஞ்சிகைப் பிரிவு ஒன்றை அமைக்கவும் வாசகர் ஆலோசனைச் சபை ஒன்றினை அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

நூலகத்தின் வளர்ச்சி கல்லூரியின் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்தது. நூலக விருத்தி, கல்வி விருத்திக்கு உரமிடுவதாகும். எமது கல்லூரியில் பெருந் தொகையான மாணக்கர்கள் க. பொ. த. உயர் நிலையில் கல்வி கற்பதால் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய நூலகத்தை விரிவுபடுத்த வேண்டியுள்ளது. இடவசதியின்மையே நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாகும். மேலும் நூல்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால் நிதிப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இளஞ்சிறார்களின் நூல் ஆர்வத்தை வளர்க்கு முகமாக அவர்களுக்கென ஒரு தனிப்பிரிவை அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

கல்லூரியின் நூலகம் கற்கும் மாணவர்களின் சொத்து மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினருக்கும் உரிய தேசிய உடமையாகும். நூலகத்தைச் சிறப்புற அமைப்பதிலும் நிர்வகிப்பதிலும் பங்கு கொண்ட அனைவரையும் இச்சமயத்தில் நினைவு கூர்வது முக்கியமாகும். இதன் வளர்ச்சிக்கு அதிபர் அவர்களின் கடமை உணர்வும் தாராள சிந்தையுமே முக்கிய காரணமாகும். இந்நூலகத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்த பலரில், இக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் காலம் சென்ற - திரு. பி. ரி. சின்னத்துரை அவர்களை இக்கல்லூரி நூலகம் ஒருபோதும் மறக்காது. அவர் மதிப்பு மிக்க 1500 புத்தகங்களை அன்பளிப்புச் செய்தார்.

எனவே ஓதுவது ஒழியாமல் இருந்திட கைப்பொருள் தன்னின் மெய்ப் பொருளான கல்வியைப் பெற்றிட கல்வியழகே அழகாகக் கொண்டிட மாணவர்களின் அறிவுத் தாகத்தை தக்க விதத்தில் தீர்த்திட அறிவார் பல்வேறு கூறுகளையும் தெரிந்து தெளிந்து

வழிகாட்டிட கருத்தும், தெளிவும், சுதந்திரமும் செயல் திறனும் மிக்
கோராம் வாழத் துணைநின்றிட பண்புகளையும், ஆற்றல்களையும் உய
ர்த்தி வளர்ப்பதன் மூலம் ஆளுமை வளர்ச்சிக்கு வழிகோலிட சென்ற
விடமெல்லாம் சிறப்புறும் கல்வியாளர்களை மிளர்ந்திட எமது சாவகச்
சேரி இந்துக் கல்லூரி நூலகமே துணை என்பதில் ஐயமில்லை.

..........

## அத்தியாயம் - 3.

### கல்லூரியில் உடற்கல்வியும், விளையாட்டுத் தொகுதிகளின் வளர்ச்சியும்.

தரமான கல்வியறிவை மாத்திரம் மாணவர்க்கு அளிப்பதனுல் நன்மை அதிகம் ஏற்பட்டுவிடுவதில்லை. தரமான கல்வியறிவோடு சிறப்பான உடற்கல்வியை அளிப்பதனுல் தான் மாணவர் உண்மையான அறிவைப் பெற்றவர் ஆவர். உடற்கல்வி அறிவும், உடற் பயிற்சியும் சிறந்த உடற்பலத்தை அளிப்பதோடு நோயற்ற மாணவர்களாகவும் உளப் பலத்துடன், உடற் பலத்தையும் பெற்றவர்களாவர். இதை இலட்சியமாகக் கொண்டே அரசாங்கமும் உடற் கல்விப் பகுதியையும் பகுத்துள்ளது. இந்தக் கல்லூரி உடற் கல்விக்கென ஒரு பகுதியையும் ஒதுக்கி அதுக்கென விசேடபயிற்சியும் அநுபவமும் வாய்ந்த திரு. நேவா என்றழைக்கப்படும் ஆசிரியரையும் நியமித்துள்ளது. இன்றைய புதிய கல்வித் திட்டத்தில் உடற்கல்விக்கு ஒரு விசேட பகுதியை கல்விப் பகுதி ஒதுக்கியுள்ளது. வருங்கால இலங்கைப் பிரசைகள் உளப்பலத்துடன், உடற் பலமும் வாய்ந்த மக்களாக வரவேண்டுமென்பதே இலங்கையரசின் அவாவாகும். உடற் பயிற்சியைப் புறக்கணித்த கல்வியினுல் அதிக நன்மைகள் ஏற்பட முடியாது. வளமான உடற்பலமும் இன்றியமையாதது. ஆகும். சிறந்த உடற்பயிற்சி பெற்ற ஸ்பாட்டா நகர், சிறந்த கல்வி அறிவும், தத்துவ அறிவும் வாய்ந்த ஏதென்ஸ் நகரை வெற்றிகொள்ள முடிந்ததென்பது வரலாறு கற்பிக்கும் உண்மை. ஆகவே தான் சாவகச்சேரி இந்தக் கல்லூரியில் கல்வி கற்று வெளியேறும் மாணவர் வெறும் ஏட்டுக் கல்வி அறிவுடனே அல்லது செயல் முறைக் கல்வித் திட்ட அறிவுடனே மாத்திரம் வெளியேறாமல் சிறந்த உடற்பயிற்சி பெற்ற மாணவர்களாகவும் வெளியேறி தமது இனத்துக்கும், தமது நாட்டுக்கும் சிறந்த தொண்டுகள் ஆற்றி நாட்டையும் இனத்தையும் முன்னேற்ற வேண்டுமென்பதே இக் கல்லூரியின் இலட்சியமும் கொள்கையாகும்.

இக்கல்லூரியின் விளையாட்டுத் தொகுதிகளின் வளர்ச்சியும் குறிப் பிடத்தக்க வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளது எனக் கூற வேண்டும். இக் கல்லூரியில் உதை பந்தாட்டக் குழுக்கள் உண்டு. இக் குழுக்கள் வருடா வருடம் யாழ் நகர்ப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் போட்டிகளில் பங்கு கொண்டு பல சாதனை நாட்டியுள்ளது. பல போட்டிகளில் தோல்வியைக் கண்டாலும், மனந்தளராது தோல்வியும் வெற்றியும் வாழ்வில் ஏற்படும் நிகழ்ச்சிக்கென உறுதி பூண்டு மேன் மேலும் முயற்சிக்கும் குழுக்களாகும்.

கைப்பந்தாட்டக் குழுக்களும் எமது கல்லூரியில் உண்டு. பல சிநேக பூர்வமான போட்டிகளில் கலந்து கொண்டு அடுக்கடுக்காகப் பல வெற்றிகளையீட்டிக் கல்லூரியின் புகழை விளையாட்டுத்துறையிலும் மேன் மேலும் உயர்த்தியுள்ளதை நாம் புகழாமல் இருக்க முடியாது. கல்வியும், விளையாட்டும் கல்லூரியின் இரு கரங்களாகக் கருதிப் போற் றப்பட்டு வருகின்றன என்பதை கூறுவதில் நாம் பெரு மகிழ்ச்சி அடை யக் கூடியதாகவுள்ளது.

எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவற்றுள்ள இந்த ஆண்டில் இக் கல் லூரி விளையாட்டுத்துறையில் மேலும் ஒருபடி முன் சென்று சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. யாழ் பள்ளிக் கூடங்களின் உதைபந்தாட்டப் போட் டியில் இப் பள்ளியின் மூன்று பிரிவினரும் முதன்முறையாகக் கலந்து கொண் டனர். அவர்களுள் துடிப்புள்ள மூன்றுவது பிரிவினர் இறுதி ஆட்டத்தில் - யாழ் புனித ஜேம்ஸ் கல்லூரியுடன் பொருதி வெற்றி பெற்று வாகை ஆயினர். இரண்டாவது பிரிவினரும் இறுதி ஆட்டத்தில் அதே கல்லூரியுடன் மோதி வெற்றி பெற முடியாது அடுவாகையர் நிலை எய்தினர். இச் சாதனைகளை நிலைநாட்ட இத்துறையில் ஈடுபட்டுத் தளரா ஊக்கத் தோடு அனைவரும் உழைக்கின்றனர்.

1942 இல் திரு. ரி. முத்துக்குமாரு அவர்கள் தலைமைப் பதவியை ஏற்றதிலிருந்தே சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறையில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. மாணவர்களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி விளையாட்டுத் துறையில் அவர்கள் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நாலு விளையாட்டு இல்லங்களை உருவாக்கி மாணவர்களை இவ்வில்லங்களுக்கிடையே பிரித்து வருடா வருடம் இல்ல விளையாட்டுப் போட்டியை தொடக்கி வைத்த பெருமை இவரையே சாரும்.

இவர் ஒரு சிறந்த கல்விமானாதலால் இல்லங்களுக்குப் பெயரை வழங்கும் போது சற்று சிந்தித்தார். இக்கல்லூரியின் ஸ்தாபகரின் பெயரில் ஒரு இல்லத்தை உருவாக்கினார். வருடா வருடம் கல்லூரியில் கல்வி பயிலும் சிறார்களை ஸ்தாபகரின் நாமத்தை மனதில் பதித்து அப் பெரியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சமுகத் தொண்டில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் மாணவர்களின் மனத்தில் வேருன்ற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தாமோதர இல்லம் கல்லூரியில் உதயமானது. அவர் ஒரு தேசாபிமானியாதலால் தென் இலங்கையில் 19ம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் கல்வித்துறையில் சேவை புரிந்த ஒரு சிறந்த கல்விமானும் பௌத்த பிக்குவுமான சிறீ சுமங்கலா என்பவரின் பெயரில் 2வது இல்லத்தை உருவாக்கினார். இலங்கையின் தவப் புதல்வனான ஆனந்தக்குமாரசாமி கலைத்துறையில் மேற்கு நாடுகளில் தனது பெயரை நிலைநாட்டிக் கொண்டு வந்தமையால் இக் கலைஞனின் பெயரில் ஆனந்தக் குமாரசாமி இல்லம் என்ற 3 வது இல்லத்தை உருவாக்கினார். நமது நாடு ஆசியாக் கண்டத்துக்கு உரியது. அக்காலத்தில் ஆசியாக் கண்டத்தில் தன்னிகரில்லாத் தலைவராக விளங்கியவர் இந்தியாவிலுள்ள உலகம் போற்றும் தலைவரான ஜவகர்லால் நேருவாகும். ஆகவே இப் பெரியாரின் பெயரில் ஜவகர்லால் நேரு இல்லத்தை உருவாக்கி மாணவர்களிடையே விளையாட்டுத்துறையில் .......

ஆர்வத்தை எழுச்சியடையச் செய்து வருடா வருடம் இல்ல விளையாட்டுப் போட்டிகளை இப் பெரியார் நடாத்தி வந்தமையால் நாம் இன்னும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருட இல்லப் போட்டியைக் கண்டு களிக்க இப்பகுதியில் வாழும் இச் சமூகம் திரண்டு வருகின்றது.

ஒருவரின் உளவளர்ச்சியும் உடல் வளர்ச்சியும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. எனவே புத்தகக் கல்விக்கு முக்கியத்துவம் - கொடுப்பது போலவே விளையாட்டுத்துறைக்கும் பிரதான இடம் - கொடுக்க வேண்டும். எமது கல்லூரி நிர்வாகம் அன்றும் இன்றும் இதில் பின்நின்றதில்லை.

மெய்வல்லுனர் போட்டிகளில் பல தடவை யாழ்ப்பாணக் கல்லூரிகளோடு போட்டியிட்டிருக்கிறோம். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணக் கல்லூரிகள் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியொன்றின் போது திரு. வே. வாமதேவன் அவர்கள் கோல் ஊன்றிப் பாய்தல், தட்டெறிதல் ஆகிய நிகழ்ச்சிகளில் சாதனைகளை நிலைநாட்டி எமது கல்லூரியின் பெயரை மிளிரச் செய்தார். பத்து ஆண்டுகளுக்கு முன் கல்வித் திணைக்களம் நடாத்திய போட்டி ஒன்றில் திரு. இ. நடராசா அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரிகளோடு போட்டியிட்டு மைல் ஓட்ட நிகழ்ச்சியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். இதனை அடுத்து கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி சான்றிதழ்களையும் பெற்றார்.

வட்டாரத்தில் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மெய்வல்லுனர் போட்டியில் எமது கல்லூரி முன்னணியில் நிற்கின்றது. இந்த ஆண்டும் அதிக புள்ளிகள் வித்தியாசத்தில் முதலிடத்திற்கான வெற்றிக் கேடயத்தைப் பெற்றுள்ளது. அஞ்சல் ஓட்ட வெற்றிக் கிண்ணமும் இவர்களுக்கே கிடைத்துள்ளது.

உடற் பயிற்சிப் போட்டியில் இவ்வாண்டு அதாவது 1979- சென்ற ஆண்டைப் போல் தொடர்ச்சியாக முதலாம் இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். விளையாட்டுக்களைப் பொறுத்த வரையில் உதை பந்தாட்டம், கரப் பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், எறி பந்தாட்டம், பூப்பந்து, வளையம் வீசுதல், "ரேபிள் ரெனிஸ்" ஆகியவற்றில் இல்லங்களிடையே போட்டி வைத்து விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. உதை பந்தாட்டத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணக் கல்லூரிகள் சங்கம் நடாத்தும் போட்டியில் பல ஆண்டுகளாகப் பங்கு பற்றி வருகின்றோம். சென்ற ஆண்டு இரு குழுக்கள் பங்கு பற்றி வெற்றி பெற்றுள்ளது. வலைப்பந்து, எறிபந்து ஆகிய விளையாட்டுக்களைப் பொறுத்த அளவில் வட்டார ரீதியில் நடாத்தப்படும் போட்டியில் சென்ற ஆண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

எமது வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, ஐந்து இல்லங்களுக்கிடையில் நடைபெற்று வருகின்றது. பிரதம பகுதிப் போட்டி புறம்பான ஒரு திகதியில் நடாத்தப்பட்டு ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வெற்றி பெற்ற மூவருக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற் பகுதிப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு சான்றிதழ்கள் வழங்கப் பட்டாலும் 6000 மீற்றர் தூரமுள்ள வீதி ஓட்டத்திற்கு முதல் அறுவருக்கு பரிசு வழங்கப்படுகிறது. அத்தோடு பழைய மாணவர் சங்க வேண்டுகோளுக்கிணங்க பழைய மாணவர் ஓட்ட நிகழ்ச்சி ஒன்றையும் நிகழ்ச்சி நிரலில் சேர்த்து வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்கி வருகின்றோம்.

மெய்வல்லுனர் போட்டிகளைச் சிறப்பாக நடாத்துவதற்கும் உதைபந்தாட்டப் போட்டிகளை இங்கு வைப்பதற்கும் எமது அதிபர் திரு. பூ. வெற்றிவேலு அவர்கள் பெரு முயற்சி செய்து அயற்காணியைச் சுவீகரித்து விளையாட்டு நிலத்தைப் போதியளவு விசாலமாக்கிச்.....

செப்பனிட்டு தந்துள்ளார்கள். இப்படி ஒரு விளையாட்டு மைதானம் அமைந்தமையும் அதற்கேற்றவாறு விளையாட்டுத் துறைக்கு பெருந் தொகையான பணத்தைச் செலவிட்டு ஊக்கம் காட்டி வருவதும் - பாராட்டற்குரியது. நீண்ட காலமாக விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பாக இருந்து ஊக்குவித்த திரு. செ. மாணிக்கவாசகர் அவர் களுக்கும் இத்துறையில் எமது கல்லூரியில் ஈடுபட்டு ஆர்வம் காட்டி வருகின்றவர்களதும் தொண்டே சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்நிலைக்குக் காரணமாகும்.

விளையாட்டுத்துறை வெற்றிக்கு முக்கிய இடம் எடுத்துக் கொடுப்பது சாரணர் இயக்கமாகும். துள்ளித் திரியும் பள்ளிப் பரு வம் தள்ளிவிட்டால் அதை அள்ளிப் பருக முடியாது. இப்பருவத்தில் மாணவர்கள் கவலைகள் அற்றவர்களாக இருக்கின்றனர். இன, மத, மொழி வேறுபாடுடையவர்களும் வாழ்க்கைத் தரங்களில் வேறுபாடு டையவர்களும் ஒரே நோக்குடையவராய் வாழும் இடம் பள்ளிக் கூடம்.

மனித வாழ்வில் மகிழ்ச்சிக்கும் மதிப்புக்கும் உரிய காலம் அது. எமது ஆற்றல் நிலை தளரும் காலத்தில் பள்ளிக் காலத்தை எண்ணியாவது ஆறுதலடையலாம். இக்காலத்தில் மாணவர்கள் அன்பா கவும், அமைதியாகவும் பழகி ஆசிரியர் சொற்கேட்டு நடக்க வேண் டும். எக்காரணம் கொண்டும் தவறுகள் செய்து பாடசாலையின் பெயரைக் கெடுக்கக் கூடாது. இன்றைய மாணவர்களே நாளைய பெரியோர்கள். நம் நாட்டின் பொறுப்பும் நம்மிடம் ஒருகால் கிடைக்கும். நாம் இப்பருவத்திலே நன்னெறிகளை கடைப்பிடிப்போ மாகில் எதிர் காலத்தில் நம் நாட்டின் நல்ல தலைவர்களாகலாம். எமது வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல அடிப்படை பள்ளிக் கூடத்தி லேயே இடப்படுகின்றது. இக் காலத்தில் உயர்ந்த இலட்சியங்கள்

பற்றிய கருத்துக்கள் ஊற்றப்படல் வேண்டும். மூடக் கொள்கைகளை மாற்றியமைக்க நாம் வழிகாட்டியாய் அமைய வேண்டும். இதுவரை இருந்து வரும் சாதிமத வேற்றுமைகளை மறந்து ஒன்றாக வாழ வேண்டும். பள்ளிக் கூடத்திற்கு என்ன நோக்கத்துடன் செல்கின்றேமோ அந்நோக்கத்திற்கு ஊறு இல்லாதவாறு நடக்க வேண்டும். குளிக்கச் சென்று சேறு பூசுவதுபோல் படிக்கச் சென்று உயர்ந்த இலட்சியங்களைப் புறக்கணித்து கீழ்நிலை எய்தலாகாது. பெற்றோரும் பெரியோரும் இலட்சிய வாழ்வை இளம் சிறார்களுக்கு வாழ்ந்து காட்டவேண்டும். அதற்கேற்ப மாணவர்களுக்கு கல்வி தொழில் பழக்கம் என்பன ஊட்டப்படல் வேண்டும்.

ஒரு பாடசாலையின் முன்னேற்றம் அது உண்டாக்கியிருக்கும் மாபெரும் தலைவர்களைப் பொறுத்தது. எனவே மாணவர்கள் தேர்வுகளில் சித்தி எய்துவதுடன் நில்லாது நாட்டின் - பெருந் தலைவர்களாக வரப் பயிற்சியும் பெறுதல் வேண்டும். ஆகவே மாணவர்கள் பாடசாலையிலேயே திறமையை வளர்க்கவும் நல்வாழ்வு வாழவும் பழகிக் கொள்ள பாடசாலைகளே வழி வகுக்கின்றது. இச் சிறப்பில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் முக்கிய இடம் பெறுகிறது.

சாரணர் இயக்கம்

"கடமை செய்வோம் - உரிமை பெறுவோம்" - கண்ணியமையாய் வாழ்ந்திடுவோம்" என்பதே இச் சாரணர்களின் குறிக்கோளாக விளங்குகின்றது. நல்லதை நாடி நல்லதைச் செய்திடும் நம்பிக்கைக்குரிய சாரணர் இயக்கத்தை நோக்கின் சாவகச்சேரித் தொகுதியிலே முதன் முதல் இங்கேதான் இவ்வியக்கம் ......

தொடங்கப்பட்டது. தமிழகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இக் கல்லூரியின் அன்றைய ஆசிரியர் திரு. ஏ. இராமசாமி அவர்களால் 1948ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மிகவும் குறுகிய காலத்திலேயே இயக்கம் வெற்றி பெற்றதால் ""இராணிச் சாரணர்களும்" இருந்தார்கள்.

பின்னர் காலமாற்றத்தில் எதிர்நீச்சல் கண்டது. ஆனால் இயக்கம் திருவாளர். என். முத்தையா அவர்களால் மறுமலர்ச்சி அடைந்தது. இக் காலத்தில் சாரணியத் தந்தை பேடன் பவல் - பிரபுவின் நாளைக் கொண்டாடவும் சாரணர் ஆண்டு விழாக்களில் கலக்கவும் பாசறைத் தீயிலும் ஏனைய சாரணர் தொழிற்பாடுகளிலும் கலந்து பொதுவாக வெற்றிக் கிண்ணங்களைப் பெறச் செய்ததோடு தென்மராட்சி சாரணர் இயக்கத்தின் ஆண்டுப் பாசறைப் போட்டிகளில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் முதலாவது இடத்துக்குரிய வெற்றிக் கேடயத்தை தட்டியதோடு யாழ் மாவட்ட சாரணர் சங்க பாசறையின் போது சமூக சேவைக்குரிய வெற்றிச் சான்றிதழையும் இயக்கம் வெற்றிகண்டுள்ளது.

முதற் சிகிச்சை வகுப்புக்களில் பயிற்சி பெற்றுச் - செஞ்சிலுவைச் சங்கத்தின் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்கள். இடையிடையே சிரமதான வேலைகளிலும் பங்கு கொண்டு நாட்டு மக்களின் பாராட்டுதலையும் மதிப்பையும் பெற்றுள்ளார்கள். 1979 ஆம் ஆண்டிலிருந்து நோக்கையில் தற்போது 40 மாணவர்கள் பாசறையில் இருக்கின்றார்கள். ஒரு சில மாணவர்கள் தமது திறமையினால் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்கள். காலம் சென்ற தபால் அதிபர் திரு. ஏ. இராமச்சந்திரன் அவர்கள் சாரணியத்துறையில் மிகுந்த ஆர்வம் காட்டி அதன் வளர்ச்சியை ஊக்குவிக்க ஒரு...

வெற்றிக் கேடயத்தையும் வழங்கி உள்ளார்கள் என்பதை நன்றியறிதலோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இயக்கம் எழுச்சி பெற்று உயர்ச்சி அடைந்திட மகிழ்ச்சியோடு உதவிடும் அதிபர் அவர்கட்கும் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவிக்கும் இந்தக் கல்லூரி - மாணவர்களின் பணியினைக் நாம் காணக் கூடியதாகவுள்ளது. தேவைகளும், சிக்கலும், நெருக்கடிகளும் அதிகமாக உள்ள எதிர்காலம்! சாரணியம் பொதுவாக எல்லா இடங்களிலும் குன்றியிருக்கும் வேளை மாணவர்களின் அமைதியின்மை உலகமெங்கும் வளர்ந்திருக்கும் நேரம் இத்தகைய கடினமான பொழுதில் இதற்குப் புத்துயிர் அளித்து உணர்ச்சி ஊட்டுவது என்பது மிகவும் கடினமானதாகும்.

திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரியின் போது எமது சாரணர் ஏகோபித்து நின்று பலதுறையில் சரியாக தொண்டாற்றியது பற்றி கோயில் முகாமையாளரும் ஏனையோரும் பாராட்டியது மிகுந்த உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கின்றது. மேலும் குருடர், செவிடருக்கான பிரதி திரட்டல், சுதந்திரதினக் கொண்டாட்டம், பேடன் பவல் தினம் ஆகியவற்றில் எமது சாரணர் பெரும் பங்கு கொண்டு பாராட்டுகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு நடத்திய பாசறை வைபவங்கள் குறைவாக இருந்தாலும் அதில் பங்கு பற்றிய பல சாரணாசிரியர்களின் பெரும் முயற்சியால் அவ்வைபவங்கள் பெரும் பலன் அளித்துள்ளது. சாரணர்களின் நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பாகவுள்ள எமது சாரண ஆசிரியர் திரு. ப. கைலாசபிள்ளைக்கும் எம்மை வலவிதத்தில் ஊக்குவித்த மாவட்ட உதவி ஆணையாளர். திரு. யூ. ரி. நடராசா அவர்களுக்கும் நன்றி சொல்லக் கூடியதாக உள்ளது.

குருளையர் :-

சென்ற பல ஆண்டு அதாவது 1971 இல் ஆரம்பித்த குருளையர் குழு சந்தோசப்படக் கூடிய முறையில் மிகு ஆர்வமாகவும் உற்சாகமாகவும் இயங்கி வருகின்றது. அவர்களுக்கான - பாசறை வைபவங்கள் போன்ற சகல பயிற்சிகளையும் நிகழ்ச்சிகளையும் ஒன்றுக நின்று நடத்துகின்ற ஆசிரியர்களான திருமதி. யோ. சுப்பிரமணியம், எம். இராமலிங்கம், இ. சபாரத்தினம் ஆகியோர் பெரிதும் பாராட்டிற்குரியவர்கள்.

பெண் சாரணர் :-

கலவனுக இருக்கின்ற பெரும் கல்லூரிக்குக்கு பெண் சாரணரும் இன்றியமையாதவரென்பதை உணர்த்தும் வகையில் பெண் சாரணர் குழுவொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று அதிபர் முயற்சி எடுத்தார். முதலுதவி எல்லோருக்கும் மிகுந்த அவசியமானதென்பதை உணர்ந்து இதற்காக நடத்தப்படும் வகுப்புகளில் கலந்து கொண்டு பரீட்சைகளில் சித்திய எய்திய சாரணர்கள் பெரும் பாராட்டிற்குரியவர்கள். சாரணரைத் தவிர்ந்த ஏனைய பலரும் இப்பரீட்சைக்கு ஆர்வத்துடன் தோற்றி சித்தியெய்தியிருக்கிறார்கள். இவ்வாறு சாரணர் இயக்கம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஒர் முதலிடத்தை வகிக்கின்றதோடு ஏனைய பாடசாலைகளோடும் - போட்டியிட்டு வெற்றியீட்டி கல்லூரியின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் பெரிதும் உதவி செய்கின்றது. ஆண், பெண் என்ற பேதமின்றி இருபாலருமே இதில் கலந்துள்ளதை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

. . .

## அத்தியாயம் - 4.

இக் கல்லூரியின் எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவில் இப் பள்ளி ஆசிரியர்களிடையே நிலவும் ஒற்றுமையும், நல்லுறவும் அவர்கள் தம் தொழிலில் சிறந்தோங்குவதும் பெருமைக்குரியதாகும். ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகைகளில் செலவிட வழிகள் வகுத்ததுமன்றி ஆசிரியர்களின் நலனுக்காகச் சிற்றுண்டிச்சாலை, கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம் என்பனவும் அமைக்கப்பட்டது. பிறர் தலையீடு எதுவுமின்றி எமது கழகம் மக்களாட்சி முறையில் தொடர்ந்தியங்கு வதற்கான சூழ்நிலை இங்கு நிலவுவது போற்றற்குரியது. பல ஆசிரியர்கள் தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்த அமைப்பின் உறுப்பினர்களாக இருந்து அரும்பணியாற்றி வருகின்றனர். பலகால் செயற்குழு உறுப்பினராகவும் இருந்து பயனுள்ள தொண்டாற்றிய - பெருமை இவர்களுக்குரியது.

காலமாற்றத்தின் தேவைக்கேற்ப இக் கழகத்தின் சட்டங்கள் அவ்வப்போது முறைப்படி திருத்தப்பட்டு வந்துள்ளன. பலகாலமாக ஆசிரிய சகோதரத்துவத்தில் இருந்த சிக்கன கடனுதவிச் சங்கப் பணிகளை நெடுங்காலமாக இயங்கிவரும் கல்லூரிக் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைத்து தனது வேலைப் பளுவினை அது குறைத்துக் கொண்டது. அன்றியும் இடமாற்றம், இளைப்பாறல் ஆகிய காரணங்களால் பள்ளியைவிட்டு விலகிய எமது உறுப்பினர்களுக்குத் தக்க முறையில் பிரியாவிடை அளித்துக் கௌரவித்துள்ளது. நிகழாண்டுப் பணிகளை 1978 - 79க்குரிய செயற்குழு வெல்லும் வகை கடமையுணர்வோடு ஆற்றி வருகின்றது. இக்குழுவில் பின்வருவோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

---

(1) திறமை மாத்திரம் ஒருவனை எழுத்தாளனாக்கமாட்டாது. புத்தகம் எழுதுபவன் மனிதப் பண்பு மிக்கவனாகவும் இருக்க வேண்டும்.
- எமர்சன் -

| | |
|---|---|
| தலைவர் | - க. அருணசலம். |
| துணைத் தலைவர்கள் | - திரு. கு. சங்கரம்பிள்ளை. |
| | திருமதி. சி. சி. மூர்த்தி. |
| செயலாளர் | - திரு. பொ. நடராஜா. |
| துணைச் செயலாளர் | - செல்வி. ஜெ. விஜயகமூர்த்தி. |
| பொருளாளர் | - திரு. க. சந்திரசேகரம். |
| பொது உறுப்பினர்கள் | - திரு. க. செல்லத்துரை. |
| | திரு. ப. கைலாயபிள்ளை. |
| | திரு. ந. நம்பு. |
| | திருமதி. தி. சோதிலிங்கம். |
| | திருமதி. நட. சண்முகலிங்கம். |

இந்த உறுப்பினர்களின் அறிவுப் பரப்பைப் பெருக்கும் நோக்குடன் அவ்வப்போது சொற்பொழிவுகளும், கருத்தரங்குகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. கைதடி செவிப்புலன் ,கட்புலன் இழந்தோர் பாடசாலை அதிபர் திரு. எஸ். டி. ஜெயசிங்கம் அவர்கள் ஐக்கிய அமெரிக்கக்" கல்வி முறை" பற்றி ஒரு சிறப்புச் சொற்பொழிவாற்றினர். யாழ் இந்துக் கல்லூரி முன்னள் அதிபர் திரு. ந. சபாரத்தினம் அவர்களும், எமது நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்களும் மதிய உணவு விருந்தில் கலந்து சொல் விருந்தளித்து புத்துணர்வூட்டினர். திரு. பிரான்சிஸ் சேவியர் அவர்கள் "உளவியலும் கல்வியும்" என்னும் பொருள் பற்றி நயம்படக் கருத்துரை வழங்கினர். இவ்வாறே எமது உறுப்பினர்களின் உளவிருத்திக்கு உதவிய அன்பர்கள் அனைவரும் கடப்பாடுடையவர்களாக விளங்கினர்!

---

(2) கல்வி என்பது காக்கு முட்டைக்குள் அடைப்பது போன்ற விஷயமல்ல, குழந்தையிடம் இயற்கையாகவுள்ள அறிவை வெளியே கொண்டு வர முயற்சிப்பதுதான் போதனை.

- ராஜாஜி -

அயற் கல்லூரிகளுடன் நல்லுறவை நாடுவதில் கழகம் எக் காலத்தும் பின்நின்றதில்லை. அயற் கல்லூரியாகிய டிறிபேக் கல்லூரி ஆசிரியர்களுடன் அவ்வப்போது உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், என்பனவற்றில் பங்கு பற்றி எமது நல்லுறவை வலுவுறச் செய்துள்ளனர். கல்லூரி மாணக்கர்களுடனும் நட்பு வழி விளையாட்டுப்போட்டிகளிலும் பங்கு பற்றி வந்துள்ளோம். இக்கழகம் சிறப்பாக செயற்பட்டு பயனுள்ள பணிகளைச் செய்வதற்குதவியாக பலதுறைகளிலும் ஒத்துழைத்த உறுப்பினர்களின் பெருந்தன்மை போற்றற்குரியது. "நலமே புரிக " என ஊக்கும் அதிபர் அவர்களும் என்றென்றும் நினைவில் நிற்கக் கூடியவர்.

இவ்வாறு ஆசிரியர்களிடையே நிலவுகின்ற சகோதரத்துவம் தான் சாவகச்சேரி இந்துக் கல்லூரி இன்று மற்றைய கல்லூரிகள் போற்றக்கூடிய ஒரு நிலைக்கும், ஏனைய கல்லூரிகள் இம் முறையைப் பின்பற்றி ஒழுக வைப்பதற்கும் காரணமாகின்றது. ஆசிரியர்களின் - சகோதரத்துவம் தான் மாணவர்களை நல்ல நிலைக்கு வர வழிகாட்டியாக அமைவதை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஒழுங்கமைப்பிலிருந்து காணக் கூடியதாயுள்ளது.

எந்த ஒரு தொழில் ஸ்தாபனத்தை நோக்கிலும் அவை சிறந்து விளங்கில் அதற்கு ஒரு மேற்பார்வை நிலையம் இருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது. இதே நிலை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் இருப்பதை நாம் காணலாம். மாணவர்கள் நலன் கருதி ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு பாலமே பெற்றோர் ஆசிரியர் சங்கமாகும். 1957 ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பெற்றோர் ஆசிரிய சங்கத்துக்குப் பதிலாக இவ்வாண்டின்(1979) நடுப்பகுதியில் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது.

## அபிவிருத்திச் சங்கம்.

கல்லூரி அபிவிருத்திச் சங்கம் நிறுவப்பட்டதன் பலனாகக் கல்லூரி வளர்ச்சிக்கு அனுகூலமாகவுள்ள உதவிச் சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்த இவ்வமைப்பு இன்றைய மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள் ஆகிய பல திறத்தவரும் ஒருமித்துச் செயலாற்றுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

தொழில் முறைக் கல்வித் திட்டம் ஒன்று அரசினரால் அறிமுகம் செய்யப்பட்டபோது இருபதினாயிரம் ரூபா செலவில் இரண்டு விசாலமான அறைகளைக் கொண்ட ஒரு தொழிற் கூடத்தை இச்சங்கம் அமைத்துதவியது. இதன் பயனாக மாணவர்கள் தொழிற் பாடங்களை வசதியாகக் கற்கக் கூடிய நிலை ஏற்பட்டது. மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாத நூலகம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்ற இடமில்லாதிருந்தது.

சாவகச்சேரித் தொகுதியின் தலையாய கல்லூரியாகிய இக் கல்லூரிக்கு ஏற்ற ஒரு அலுவலகமும் இல்லாதிருந்தது. இவ்விரு தேவைகளும் ஒருங்கே நிறைவேற்றக் கூடிய வகையில் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் ஓர் இரு மாடிக் கட்டிடத்தை இச் சங்கம் அமைத்துதவியது. உயர் வகுப்புக்களிற் கற்கும் பெருந்தொகையான மாணவர்கள் இதனாற் பயன் பெறுகின்றனர்.

பெருகி வரும் மாணவர் தொகையின் குடி நீர்த் தேவையைப் பூர்த்தியாக்கும் வகையில் பதினாயிரம் ரூபா செலவில் எண்ணாயிரம் கலன் கொள்ளளவுடைய ஒரு நீர்த் தொட்டி இச் சங்கத்தினால் அமைக்கப்பட்டது. மேலும் வகுப்பறைகள் போதாமையால் ஏற்படும் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு இருபதினாயிரம் ரூபா செலவில் இரு வகுப்பறைகளை இச்சங்கம் கட்டி உதவியுள்ளது.

இத்தோடமையாது கண்டி வீதி ஓரமாக அமைந்துள்ள சுற்று மதிலும் மூவாயிரம் ரூபா செலவில் அமைந்துள்ளது. இச்சுற்றுமதிலை திரு. சி. நவரத்தினம் அவர்கள் ஆருயிரம் ரூபா செலவில் செப்பனிட்டு மேலதிகமாக ஒரு நுழைவாயிலையும் அமைத்துத் தந்துள்ளார். சுருங்கக் கூறுவதாயின் இச்சங்கம் கடந்த ஏழு ஆண்டுகளில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான பணத்தைக் கல்லூரி வளர்ச்சிக்கு செலவு செய்துள்ளது.

புதிய மாணவர்களைக் கல்லூரியிற் சேர்க்கும் முறை - சீரான வகையில் நீதி நியாயத்துடன் நடைபெறும் பொருட்டுக் கல்லூரி ஆசிரிய பிரதிநிதிகளுடன் எமது சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து "மக்கள் குழு" அமைக்கப்பட்டு அக் குழு அவ்வேலைகளைச் சீரான முறையில் செய்து வருகின்றது. இத்தனைப் பெருமைக்கும் மூலகாரணமாக உள்ளவர் இச்சங்கத்தின் தலைவராகிய கல்லூரி அதிபர் திருவாளர் பூ. வெற்றிவேலு அவர்களே என்பதை யாவரும் அறிவர். அவரது தன்னலமற்ற சேவை இக்கல்லூரியின் இந்நிலைக்கு காரணமெனக் கூறலாம்.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் அபிவிருத்திச் சங்கம் இருப்பதும் ஒரு காரணமாகின்றது. பெற்றோர் சங்கத்தின் உறுதுணையே இன்று ஆசிரியர்கள் மாணவர்களின் நலனைக் கவனிக்கவும் தேவையைக் கண்டு பிடிக்கவும் காரணமாகின்றது.

அபிவிருத்திச் சங்கத்தைத் தொடர்ந்து ஆசிரியர் நலனுக்காக உருவாக்கப்பட்டதே கூட்டுறவச் சிக்கன கடனுதவிச் சங்கமாகும். மாணவர்களை வழிப்படுத்துவது ஆசிரியர்கள். எனவே ஆசிரியர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுத்து அவர்களைச் சந்தோஷமாக இருக்கச் செய்தால் தான் அவர்கள் தக்க முறையில் மாணவர்களை வழி நடத்துவர்..

எமது ஆசிரியர்களின் பொருளாதார நெருக்கடிகளுக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு 1973 ஆம் ஆண்டு ஆடிமாதம் 54 உறுப்பினர்களுடன் இச்சங்கம் தொடங்கப்பட்டது. அதிபரினதும் அவ்வருடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட செயற் குழுவினதும் பெரு முயற்சியினால் 21-08-1974 தொடக்கம் இது ஒரு பதிவுசெய்யப்பட்ட சங்கமாக இயங்கத் தொடங்கியது. தற்போது இச்சங்கத்தில் எழுபத்தைந்து உறுப்பினர்கள் உள்ளனர்.

எமது சங்கத்தின் முக்கிய நோக்கம் உறுப்பினர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதாகும். இந் நோக்கத்தினடிப்படையில் உறுப்பினர்களிடையே கூட்டுறவு, நல்லெண்ணம், சிக்கனம், சேமிக்கும் இயல்பு ஆகியவற்றிற்குரிய மனப்பான்மையை வளர்ப்பதற்கு சங்கம் அயராது உழைத்து வருகின்றது. உறுப்பினர்கள் மாதாந்தம் சேமிப்புக் கணக்கில் பணம் கட்டி வருகின்றார்கள். மேலும் அவர்களுக்குத் தேவை ஏற்படும் போது சங்கம் கடனுதவி செய்கின்றது. உறுப்பினர்கள் பெறும் கடன் பணத்தை அவர்கள் விவசாயம், கைத்தொழில், வீடு கட்டுதல் போன்ற தேவைகளுக்கு உபயோகப்படுத்துவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலை உயர்த்தப்படுகின்றது.

சங்கம் பெறும் இலாபம், கூட்டுறவு நிதி, அடக்கப் பணம், சேமவட்டி என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்டு எஞ்சிய இலாபம் பங்கு இலாபமாக உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இச் சங்கத்தின் செயற்குழு ஆண்டு தோறும் பொதுக் கூட்டத்தில் உபவிதிக்கமைய தெரிவு செய்யப்படும். இச் சங்கம் தொடங்கிய காலம் முதல் செயற்குழுவில் உறுப்பினராக இருந்தோர் கடமையுணர்ச்சியுடன் சங்கத்தை வளர்ப்பதற்காக அரிய தொண்டாற்றியுள்ளனர்.

---

(3) கடமையுணர்ச்சியுள்ள இடத்தில் பதவி ஆசை இருக்காது.
— டபிள்யூ. ஹெர்ரின் —

இச் சங்கத்தின் பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இடவசதி அளிப்பதுடன் சங்கத்தின் வளர்ச்சிக்கு அவ்வப்போது தேவையான புத்திமதிகளையும் கூறி ஊக்கமளித்து வரும் அதிபர் திரு. பூ. வெற்றிவேலு அவர்கட்கு சங்க உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாக இருக்கின்றனர். சங்க உறுப்பினர்கள் எல்லோரும் நம்பிக்கையுடன் சங்க வளர்ச்சிக்குரிய ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். மேலும் சங்கம் ஒழுங்காக நடைபெறுவதற்கு ஏற்றமுறையில் கூட்டுறவுப் பகுதியினரும் சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளை நிர்வாகிகளும் தேவையான உதவி அளித்து வருகின்றனர்.

. . . . . .

## பழைய மாணாக்கர் சங்கம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியை இன்று இலங்கையில் அறியாதவர் எதும் அறியாதவரே. இவ்வளவிற்கு கல்லூரி ஓங்கி வளர்வதற்கான காரணங்களுள் முக்கியமானது பழைய மாணவர் சங்கமேயாகும். கல்லூரியின் தேவைகள் எல்லாவற்றிலும் கண்ணுங்கருத்துமாக இச்சங்கம் இருப்பதோடு தேவை நோக்கி அவ்வப்போது கைகொடுத்து உதவியிருக்கின்றது. இதனால் எமது சங்கத்தின் ஆலோசனைகளை கல்லூரி நிர்வாகம் எல்லா மட்டத்திலும் அனுசரித்து வந்திருக்கின்றது.

இக் கல்லூரியின் சங்க ஆரம்ப உறுப்பினராக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு. வே. குமாரசாமி அவர்கள் இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு மதிப்பிட முடியாத அத்துணைப் பெருந் தொண்டாற்றியுள்ளனர். இன்றைய பாடங்களில் அதிக மதிப்பை பெறுவது விஞ்ஞான பாடம். விஞ்ஞானக் கல்விக்கு அச்சாணியாக அமைவது ஆய்கூடம். இந்த ஆய்கூடத்தை கல்லூரியின் பெரு....

வளர்ச்சிக்கு வித்தாய் அமைந்த இவ்விடயத்தை இரட்டை மாடியாகக் கட்டி எழுப்பிய செய்திறனும் ஆற்றலும் எமது சங்கத்திற்கே உரியது என்று கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேம். இக் காலத்தில் எமது சங்கச் செயலாளராக இருந்து உழைத்த திரு. பு. வெற்றிவேலு, திரு. இ. த. சுப்பிரமணியம் ஆகியோரையும் கட்டடத்தின் கூரை வேலையை அமைத்துத் தந்து உதவிய திருவாளர்கள், த. நீதிராசா, எஸ். சின்னத்துரை ஆகியோர், அப்போது அதிபராக இருந்து இதனை ஊக்குவித்த திரு. மு. வைத்தியலிங்கம் அவர்கள் - சேவை மறக்க முடியாதது.

இவ்வாண்டிற்குரிய வருடாந்தப் பொதுக் கூட்டமும் மதிய போசன விருந்தும் நடைபெற்றது. ஆண்டுதோறும் வருடாந்தக் கூட்டம் சித்திரை மாதம் நடைபெற்று வருகின்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எமது சங்க உறுப்பினர் வைத்திய கலாநிதி . க. மாணிக்கம் அவர்கள், இக்கல்லூரி பழைய மாணவர்கள் அனைவரும் இச்சங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஒவ்வொரு அம்சத்திலும் ஏற்படுகின்ற பங்கமைப்பே இவ்வாறு அதன் வளர்ச்சிக்கும் ஏனைய கல்லூரிகள் இதனை பின்பற்றவும் காரணமாகின்றது.

வடமராகாணத்தில் சாவகச்சேரியில் உள்ள கல்லூரிகளின் முதல் இடத்தையும், முக்கிய இடத்தையும் இந்துக் கல்லூரி பெற்றமையே இன்று இந்துக் கல்லூரியை ஓர் ஆராய்ச்சி நூலாக எழுதுவதற்கு உதவியது.

---

(4) பணிவு என்பது வெறும் தாழ்ந்த உணர்ச்சியைக் குறிப்பது அல்ல. அறிவாளியின் பரஸ்பர மரியாதைச் சின்னம் இது. - அடிஸன்.

## தென்மராட்சியின் கல்விக் கலங்கரை ஒளி.

தென்மராட்சியில் வாழுகின்ற மக்களுக்கு வரப்பிரசாதமாக விளங்குவது சாவகச்சேரி இந்துக் கல்லூரி என்று கூறின் அது மிகையாகாது. தென்மராட்சியில் அமைந்திருக்கும் கிராமங்களில் வாழும் மாணவர்களின் கல்வி, ஆன்ம மொழி வளர்ச்சிக்காக இக் கல்லூரி விளங்குகிறது. "ஒருமைக்குத்தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து" என்ற வள்ளுவன் மொழிக்கிணங்க தென்மராட்சியிலுள்ள சிறார்கள் கல்வி கற்று ஒற்றுமையுடன் நன்நம்பிக்கையுடன் மொழிப் பற்றும், சமயப் பற்றும், நாட்டுப் பற்றும் பெற்று வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ வழிவகுப்பது இக்கல்லூரி என்று கூறின் அது முக்காலும் உண்மை.

அஞ்ஞானம் என்னும் மாயை உலகில் இருந்து தவிக்கும் மக்களுக்கு கல்வி ஒளியை அளித்து மக்களை நல்வழிப்படுத்தும் நந்தா விளக்காக விளங்கும் இக் கல்லூரியில் கல்வி கற்ற எத்தனையோ ஆண்களும், பெண்களும் இன்று வாழ்க்கையில் மிக உன்னத நிலையில் அமர்ந்து சுகபோகங்களை அனுபவிப்பதற்கு உரமிட்டது இக் கல்லூரி என்னும் தாய்தான் என்பதை நன்றிமறவா உள்ளங்கள் ஒரு போதும் மறப்பதில்லை. இன்று இக் கல்லூரியில் கல்வி கற்கும் எத்தனையோ இளம் உள்ளங்களில் நிறைந்திருக்கும் பல குறிக்கோள்களை நிறைவேற்றும் கடமை உணர்ச்சியுள்ள தந்தையாகவும் விளங்குகிறது, இக் கல்லூரி.

பண்பாட்டின் உறைவிடமாய் அறிவுச் சங்கத்தின் சின்னமாய் நாளும் வளர்ந்து தன்நிழலில் அண்டும் சிறார்களின் அறிவு ஒளியை விருத்தி செய்த வண்ணமாக விளங்கும் இக்கல்லூரியின் புகழும் பெருமையும் காலா காலம் வரைக்கும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

## முடிவுரை.

கடந்த 75 வருடங்களாக ஒரு சிறந்த நிறுவனமாக இயங்கி வருகின்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி தொடர்ந்தும் எல்லையில்லா வளர்ச்சி பெற்று ஏனைய பாடசாலைகளுக்கு ஒரு வழிகாட்டியாகவும், உற்ற தோழமையுடனும் இயங்கி வர வேண்டும். பல ஆயிரக்கணக்கான மக்களைக் கொண்டிருக்கும் இப்பாடசாலை தொடர்ந்தும் பலரை நன்னுள் கவர்ந்திழுத்துஆவன வசதிகளைச் செய்ய வேண்டும்.

அதாவது பல தூர இடங்களிலிருந்து மாணவர்கள் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றார்கள். அவர்கள் பின்தங்கிய பகுதிகளிலிருந்து வருவதால் போக்குவரத்து வசதி மிகக் குன்றியிருப்பதால் பாடசாலைக்கு ஒழுங்காக வந்து போக முடியாதுள்ளது. எனவே அவர்களுக்குத் தேவையான இருப்பிட வசதியைச் செய்து கொடுத்து ஒரு பாடசாலைவிடுதியை உருவாக்க வேண்டும். இவ்வாறு செய்வதினால் மாணவர்கள் கஷ்டமின்றிப் படிக்கவும் இக் கல்லூரி மேலும் சிறந்து வாழவும் வழிவகுக்கின்றது.

மேலும் போதிய விஸ்தீரணமான விளையாட்டு மைதானம் இல்லாதிருப்பதும் ஓர் குறைவாகக் காணப்படுகிறது. பாடசாலைக்கு அண்மையிலுள்ள நிலங்களை அரசாங்க மூலம் பெற்று மைதானத்தை அகலமாக்கினால் மிகவும் பொருத்தமாக உள்ளது. தற்போது இந்துக் கல்லூரியின் நூலகம் சிறிது விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எனினும் மாணவர்களுக்கு ஏற்ற நூலகமாக இன்னும் அது விளங்கவில்லை. அதாவது போதிய நூல் வசதிகளும் குறைவாகவே காணப்படுகின்றது.

---

(5) அனுபவம் இல்லாத அறிவு, ஏந்தி வைக்கப்பாத்திரம் இல்லாத தண்ணீரைப் போல் பயனற்றுப் போகும். - சீனப் பழமொழி.

இவ்வாறு இயங்கி வரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி இத்தகைய சிறு அலுவல்களையும் பூர்த்தி செய்வதாயின் அது யாவரும் போற்றும் ஒரு நிறுவனமாக எங்கும் மிளிர்ந்திருக்கும். இதனை வாசிக்கும் மக்கள் எவரும் இக் கல்லூரியின் இச் சிறு தடையை நீக்கி மேலும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வர் என்பது நிச்சயம். இக் கல்லூரியால் உருவாக்கப்பட்ட எத்தனையோ வைத்தியர்கள், கணக்காளர், கட்டவாளர் உலகெங்கும் பரந்து காணப்படுகின்றனர். இன்னும் இவர்கள் தொகை கூடி ஒவ்வொரு நாட்டிலும் இந்துக் கல்லூரி மாணவர்கள் உள்ளார்கள் எனச் செய்வது இக்கல்லூரியின் கடமை.

இன்று ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, சிங்கப்பூர், சவூதி அரேபியா போன்ற பகுதிகளில் எமது கல்லூரி பழைய மாணவர்கள் இருப்பது உண்மை. அத்துடன் இலங்கையின் உத்தியோகத்தர்களிலும் எமது மாணவர்கள் சிறந்த தொழிலில் இருப்பதும் கண்கூடு. இன்னும் வருங்கால அரச சபைகளையும் எத்தனையோ பாராளுமன்ற உறுப்பினர்களையும் எமது கல்லூரி அனுப்பி வைக்கத் துணிவதோடு மேற்கூறிய காரணங்கள் பூர்த்தி செய்யப்பட்டால் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள் இவை யாவும் செய்து முடிக்கப்பட்டு யாவும் முற்றும்பெறும்.

நான் எதிர்பார்க்கும் இந்நிலை விரைவில் வருவதற்கும், யாவையும் குறைகள் நீக்கப்பட்டு, பலராலும் பல உதவிகள் கிடைக்கப் பெற்று இந்துக் கல்லூரி வருங்காலம் " இப்படியும் ஒரு கல்லூரி உண்டா" என்று யாவரும் வியக்கும் வண்ணம் விளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகின்றேன்.

# சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர்கள் வரிசை.

பாடசாலை உருவாக்கப்பட்டது 1904.

| | | |
|---|---|---|
| 1904 | - 1910 | திரு. எஸ். கே. கந்தசாமி. |
| 1911 | - 1917 | திரு. வி. தாமோதரம்பிள்ளை. |
| 1922 | - 1926 | திரு. கார்த்திகேசு. |
| 1926 | - 1932 | திரு. சுவாமிநாதன். |
| 1933 | - 1934 | திரு. கெள்சுமன். |
| 1935 | - 1937 | திரு. ந. அருணாசலம். |
| 1938 | - 1940 | திரு. வி. பாலசுந்தரம். |
| 1941 | - ஆனி | திரு. பொ. தம்பு. |
| 1942 | - 1950 | திரு. ந. முத்துக்குமாரு. |
| 1951 | - 1953 | திரு. ஏ. எஸ். கனகரத்தினம். |
| 1953 | - ஆனி | திரு. ச. கை. செல்லையா. |
| 1954 | - 1962 | திரு. ஆ. மண்டலேஸ்வரன். |
| 1963 | - | திரு. ஆ. க. கந்தையா. |
| | | திரு. மு. வைத்திலிங்கம். |
| 1970 | - | திரு. பூ. வெற்றிவேலு. |

........

! ஓம் !

# சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வரலாற்றுக் குறிப்பு.

நிறுவப்பட்ட நாள் முதலாகச் சென்ற எழுபத்தைந்து ஆண்டுகளில் இக்கல்லூரி அடைந்த வளர்ச்சியைக் காட்டும் குறிப்புக்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

1904 - திரு. வி. தாமோதரம்பிள்ளை அவர்களால் நிறுவப்பட்டது.

22 - இந்துக் கல்லூரிச் சபையிடம் கையளிக்கப்பட்டது.

34 - "சி" தர பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது.

35 - பிரதான மண்டபம் கட்டப்பட்டது.

43 - இல்லப் பிரிவுகள் புகுத்தப்பட்டன.

45 - (1) "பி" தர பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது.

(11) பழைய விஞ்ஞான கூட அறைகள் ஆய்கூடமாக மாற்றியமைக்கப்பட்டது.

49 - "ஏ" தரப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது.

50 - பெற்றோர் ஆசிரிய சங்கத்தால் முதன் முதலாக ஒரு மனையியற் கூடம் அமைக்கப்பட்டது.

52 - தொடக்கப்பள்ளிக்கென தண்டவாளத் தூண்களிட்டு ஒரு வகுப்பறைக் கட்டிடம் பெற்றோர் ஆசிரிய சங்கத்தால் கட்டப்பட்டது.

54 - முதன் முதலாக ஒரு விஞ்ஞான மாணக்கர் பல்கலைக் கழகம் புகுந்தார்.

57 - பழைய மாணக்கர் சங்கம் அமைக்கப்பட்டது.

62 - அரசுடைமையாயது.

64 - (1) பழைய மாணக்கர் சங்கம் விஞ்ஞான ஆய்கூட கட்டிட வேலைகளைத் தொடங்கியது.

(11) அரசு வழங்கிய 33,000 ரூபாவைச் செலவிட்டு 9 வகுப்பறைகள் (சு புளக் - ) கட்டப்பட்டன.

1966 - முதன் முதலாக கலைத்துறை மாணக்கர் பல்கலைக் கழகம் புகுந்தனர்.

68 - திறந்த வெளி அரங்கு அமைக்கப்பட்டது.

71 - (i) நேர்வுக்குத் தோற்றிய கலைத்துறை மாணக்கர் (17) அனைவரும் பல்கலைக் கழகம் புகுந்தனர்.

(ii) அரசு வழங்கிய ரூபா 25,000/- ஐச் செலவிட்டு 5 வகுப்பறைகள் (ஜே புளக் - ) கட்டப்பட்டன.

72 - (i) 18 ஆண்டுகளின் பின் 2 விஞ்ஞான மாணக்கர் பல்கலைக் கழகம் புகுந்தனர்.

(ii) அரசின் உதவியின்றி பழைய மாணக்கர் சங்கம் விஞ்ஞான ஆய்கூட வேலைகளை நிறைவேற்றியது.

(iii) அரசு வழங்கிய 26,000 ரூ- ரூபாவைச் செலவிட்டு மேலும் 5 வகுப்பறைகள் (டி புளக்- ) கட்டப்பட்டன.

73 - (i) முதன் முதலாக ஒரு மாணக்கர் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெற்றோர்.

(ii) அரசு வழங்கிய ரூபா 20000/- ஐச் செலவிட்டு 5 வகுப்பறைகள் (சி புளக்- கட்டப்பட்டன.

(iii) ரூபா 25,000/- செலவில் பெற்றோர் ஆசிரிய சங்கத்தால் அமைக்கப்பட்ட தொழிற்கூடம் (ஏ புளக் )வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

74 - மேலும் 4 வகுப்பறைகள் அமைக்க அரசு 20,000/- ரூபா வழங்க உதவியது.

1976 - (1) ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் பெற்றோர் ஆசிரிய சங்கத்தால் அமைக்கப்பட்ட நூலகக் கட்டிடம், மேற்கு ஜேர்மனி தூதரக முதற் செயலாளர் செல்வி. ஊர்சுலா முல்லர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

(11) 8 வகுப்பறைகளடங்கிய ஓர் இருமாடிக் கட்டிடத்தை அமைக்க அரசு ஒன்றரை இலட்சம் ரூபா வழங்க உதவியது.

(111) வடக்குப் புறமாக உள்ள காணியிலிருந்து எட்டுப் பரப்பு ரூபா 40,000/- செலவில் பெறப்பட்டது.

77 - (1) மண்டபம் செப்பனிடப்பட்டது. ரூபா 25,000/- செலவில் முதற் கட்டம் நிறைவேற்றப்பட்டது.

(11) பொறியியல் -4. மருத்துவம்-2 உட்பட 14 விஞ்ஞான மாணவர்கள் பல்கலைக் கழகம் புகுந்தனர்.

78 - (1) உயர்நிலை வகுப்புக்களில் 500 மாணவர்கள் பயின்றனர்.

(11) தொடக்கப் பள்ளிக்கென ஒரு இரு மாடிக் கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. இதற்கென அரசு ரூபா 87,000/- வழங்கி உதவியது.

79 - மண்டபம் மீண்டும் செப்பனிடப்பட்டது. இரண்டாம் கட்டம் 50,000 ரூபா செலவில் நிறைவேறியது.

(11) நேர்தற் தொகுதிக்கு ஒன்று - என்னும் அரசின் புதிய கொள்கைக்கு அமைய, இப் பள்ளி மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது.

1979 - (11) நாமுயர்த்தியதையொட்டி அரசு வழங்கிய இரண்டு இலட்சம் ரூபா செலவில் ஓர் இரு மாடி வகுப்பறைக் கட்டிடமும், ஒரு புதிய மலையியற் கூடமும் அமைக்கும் வேலைகள் தொடங்கப்பட்டன.

(1) திரு. மு. நா. சுப்பிரமணியம், ஜே. பி. அவர்களால் ஒரு குடிநீர்க் கிணறு அமைத்து உதவப்பட்டது.

முழுப் பள்ளிக் கூடம்

நல்ல பள்ளிக் கூடம் பல ஈடுபாடுகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். பாட மகிழ விடவேண்டும். செய்ய, வளர்க்க இடம் கொடுக்க வேண்டும். சொல்ல, கேட்க, எழுத, பழக இடம் கொடுக்க வேண்டும். எண்ணக் கற்றுக் கொடுக்க வேண்டும். கூடி வாழப் பயிற்சி அளிக்க வேண்டும். கூடிச் செயல் புரிய முறைப்படுத்த வேண்டும். முன் வந்து பொறுப்பேற்கத் தூண்ட வேண்டும். அடங்கி நின்று பின்பற்றும் போக்கையும் வளர்க்க வேண்டும். இந்த வேலைக்கு இடமும் நேரமும் ஊக்கமும் அளிக்கும் விளைநிலமே பள்ளிக் கூடம்.

- எண்ண அலைகள் -

---

சிறிது படித்தல், நிறைய சிந்தித்தல், சிறிது பேசுதல், நிறையக் கேட்டல் இதுதான் அறிஞரை வழி.

---

## கொழும்பு விவேகானந்தா சபை

## சமய பாடத் தேர்வு.

| | தோற்றியோர் | சித்தியடைந்தோர் |
|---|---|---|
| 1975 | 1,227 | 1,010 |
| 1976 | 1,172 | 945 |
| 1977 | 1,116 | 824 |
| 1978 | 1,227 | 933 |
| 1979 | 1,265 | 1,005. |

.......

# பல்கலைக் கழக அனுமதி.

( UNIVERSITY ADMISSION )

| வருடம் | கலை | விஞ்ஞானம் |
|---|---|---|
| 1966 | 1 | - |
| 1967 | 1 | - |
| 1968 | 2 | - |
| 1969 | 4 | - |
| 1970 | 8 | - |
| 1971 | 17 | - |
| 1972 | 8 | - |
| 1973 | 15 | 1 |
| 1974 | 12 | 1 |
| 1975 | 18 | 3 |
| 1976 | 7 | 3 |
| 1977 | 18 | 14 |
| 1978 | 9 | 4 |


மாணவர்களின் எண்ணிக்கை

( NUMBER OF STUDENTS )

| வருடம் | 1- 5 | 6 - 10 | 11 - 12 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1960 | 473 | 573 | 22 | 1068 |
| 61 | 453 | 485 | 40 | 978 |
| 62 | 417 | 524 | 41 | 982 |
| 63 | 401 | 613 | 54 | 1068 |
| 64 | 414 | 693 | 61 | 1168 |
| 65 | 512 | 667 | 44 | 1223 |
| 66 | 520 | 565 | 33 | 1118 |
| 67 | 582 | 769 | 49 | 1400 |
| 68 | 564 | 908 | 72 | 1,644 |
| 69 | 582 | 927 | 66 | 1575 |
| 70 | 593 | 980 | 83 | 1656 |
| 71 | 624 | 908 | 119 | 1651 |
| 72 | 593 | 1260 | 139 | 1992 |
| 73 | 590 | 1344 | 144 | 2012 |
| 74 | 595 | 1224 | 186 | 2005 |
| 75 | 610 | 1131 | 269 | 2010 |
| 76 | 614 | 1069 | 323 | 2006 |
| 77 | 649 | 1071 | 326 | 2046 |
| 78 | 706 | 951 | 498 | 2155 |
| 79 | 751 | 962 | 528 | 2241 |


(University Admissions)
(Arts)

பல்கலைக் கழக அனுமதி
கலைப் பிரிவு




(University Admission)
(Science)

பல்கலைக் கழக அனுமதி
(விஞ்ஞானம்)



(1960 - 1979)



## உசாத்துணை நூல்கள்.


(1) நாமோதரன் ஆண்டு மலர்.
1970 , 1972, 1979.

(2) ஈழநாடு பத்திரிகை.
1980 - 03 - 06.

(3) "வடமராட்சியின் கலங்கரை விளக்கம்".
எழுதியவர் வே. பஞ்சாட்சரம்.

(4) இந்துக் கல்லூரி அதிபரின் நாளாந்த ஏடு.

(5) கல்லூரியின் கடந்த கால வரைபாடுகள்.


. . . . . . . . .

871

8871